
சுபா
மௌன
முழக்கம்

*மௌன முழக்கம்*

*சுபா*

சுபா©SUBHA

sureshbala.subha@gmail.com

இந்நூலின் முழு உரிமை ஆசிரியரைச் சாரும்.
மதிப்புரைகள், விமர்சனங்கள் வழங்குவோர்,
தம் தேவைக்கு ஏற்ப இந்நூலின் சில பகுதிகளை
மேற்கோளாக எடுத்துக் காட்டுவது தவிர,
இதிலிருந்து சில பகுதிகளைப் பயன்படுத்துவதோ
வேறு வகையில் மறுபிரசுரம் செய்வதோ,
அச்சு மற்றும் மின் ஊடகங்களில் மறு பதிப்பிடுவதோ
காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

விதை

"ரெடியா?"

ராஜேஷின் குரல் கீழேயிருந்து பொறுமையில்லாமல் கேட்டது.

"இதோ ஆயிற்று" என்று கண்ணாடிக்கெதிரிலிருந்து பதில் குரல் கொடுத்தாள், பாரதி. கண் இமைகளை ஒவ்வொன்றாக மூடி ஜிகினா தூவிக்கொண்டாள். கன்னத்து மேடுகளில் ரூஜைத் தொட்டபோது, "அம்மா" என்று குரல் வந்தது முதுகுக்குப் பின்னால் இருந்து.

திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அபிராமி தயக்கத்துடன் நின்றுகொண்டிருந்தது.

"அதற்குள் எழுந்துவிட்டாயா, நீ?" பாரதி டிரெஸ்ஸிங் டேபிளில் இருந்த அலங்கார வஸ்துக்களை அள்ளி டிராயரில் போட்டு மூடினாள். கண்ணாடியில் பார்த்து புடவையில் தோளருகே ப்ரூச்சைப் பொருத்திக்கொண்டே பேசினாள்.

"இதோ பார் அபிராமி. அம்மாவும், அப்பாவும் டாக்டரிடம் போகிறோம். நீ சமர்த்தாய்.."

"பொய். நீங்கள் பார்ட்டிக்குத்தானே போகிறீர்கள்? டாக்டர் வீட்டுக்குப் போவதற்கு நீ லிப்ஸ்டிக் போட்டுக்கொள்ள மாட்டாய்."

"ஏழு வயசில் எமன் மாதிரி கேள்விகள் கேள்." – பாரதி சிடுசிடுத்தாள். கோபப்படும்போது முகத்தில் விழும் ரேகைகள் மேக்கப்பைக் கலைத்துவிடுமே என்று சற்றே கவலைப்பட்டாள்.

"அம்மா, எனக்கு தனியாக இருக்க பயமாயிருக்கிறது அம்மா. என்னையும் கூட்டிப்போ அம்மா. நான் ஒழுங்காக இருக்கிறேன். எந்த விஷமமும் பண்ண மாட்டேன். உன் கையையே பிடித்துக்கொண்டிருக்கிறேன்.. ப்ளீஸ்மா.." என்று அபிராமி, அம்மாவின் புடவையைப் பிடித்தது.

"சனியனே, புடவையைக் கலைக்காதே.." என்று பாரதி அவசரமாக அதன் பிஞ்சுக் கையை உதறினாள். "இன்றைக்குப் பார்த்துத்தானா வேலைக்காரியின் மாமியார் மண்டையைப் போட வேண்டும்? துணைக்கு யாரும் இல்லாததால்தானே தவிக்க வேண்டியிருக்கிறது.."

"அம்மா, ப்ளீஸ்.." – அம்மாவைத் தொட்டு தொந்தரவு செய்தால்கூட அவளுக்கு எதிராக அந்த செயல் கவனிக்கப்பட்டுவிடுமோ என்ற நடுக்கத்துடன் அபிராமிக்குட்டி பின்னால் கைகளைக் கட்டிக்கொண்டு கெஞ்சியது.

"பாரதி!" – கீழேயிருந்து ராஜேஷின் குரல் மறுபடி அலறியது. "வானம் இருட்டியிருக்கிறது. மழையும் காற்றும் வந்துவிட்டால் வண்டி ஓட்டுவதே கஷ்டமாகிவிடும். கொஞ்சம் சீக்கிரம் வந்து தொலையேன்."

“அதுதான் பெற்று வைத்திருக்கிறோமே ரத்தினம்போல ஒரு புத்திரி.. அவளும் வருவேன் என்று அடம்பிடிக்கிறாள்..” என்று பாரதி கசப்புடன் குரல் கொடுத்தாள்.

“அபிராமி.. அபிராமிக்குட்டி..” என்றபடி ராஜேஷ் மாடியேறி வந்தான். “பெரியவங்க போகிற இடத்துக்கெல்லாம் உன்னையும் கூட்டிப்போக முடியுமா, யோசி..”

“அப்படியானால் என்னை என் ஃப்ரெண்ட் வீட்டில் விட்டுவிட்டுப் போங்கள்.. நான் விளையாடிக்கொண்டிருக்கிறேன்..” அபிராமி தைரியமாக, மண்டியிட்டு உட்கார்ந்த அப்பாவின் சட்டைக் காலரைத் திருகியது.

ராஜேஷ் தன் மணிக்கட்டைத் திருப்பி அபிராமியின் முகத்துக்கு நேரே காட்டினான்.

“டைம் ஆகிவிட்டது செல்லக்குட்டி.. அப்பாவுடைய டில்லி பாஸ் இந்த மீட்டிங்கிற்கு வருகிறார்.. அவரிடம் அப்பாவிற்கு காரியம் ஆக வேண்டியிருக்கிறது. அப்பாவுக்கு ப்ரமோஷன் கிடைத்தால் உனக்கு நல்லதுதானே? அப்பா இன்னும் அதிகம் சம்பாதித்தால், உனக்கு நிறைய பொம்மையெல்லாம் வாங்கித் தருவாரில்லையா?”

“அப்பா.. என்னைத் தனியே விட்டுப்போகாதீர்கள் அப்பா.. நான் வேண்டுமானால் காரிலேயே உட்கார்ந்திருக்கிறேன்.. பார்ட்டியில் வந்து தொந்தரவு செய்யமாட்டேன்.. சரியா?”

“இல்லை, கண்ணம்மா. நீ புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய். அங்கே வேறு எந்த குழந்தைகளும் வரப் போவதில்லை. ஐந்து நிமிடத்திலே உனக்கு போரடித்துவிடும். வீட்டுக்குப் போகலாமா என்று துருவ ஆரம்பித்துவிடுவாய்.. இரண்டே மணி நேரம்.. உனக்கு கார்ட்டூன் போட்டுவிட்டுப் போகிறேன்.. பார்த்துக்கொண்டிரு..”

“அப்பா ப்ளீஸ்ப்பா..”

“அதனிடம் கெஞ்சிக்கொண்டிருந்தால் இப்படித்தான் அடம் பிடிக்கும். இழுத்து உள்ளே போட்டுவிட்டு கிளம்பலாம், வாருங்கள்.”

“இரு, பாரதி. குழந்தையிடம் சொல்கிற விதத்தில் சொன்னால் புரிந்துகொள்ளும். இல்லை, கண்ணம்மா?”

“நானும் வருவேன், நான் தனியே இருக்க மாட்டேன்” என்று அபிராமி தரையில் உதைத்து அழுதது.

பளார் என்று அதன் கன்னத்தில் ஒரு அறை பறந்தது. அது பிரமித்து அப்பாவைப் பார்த்தது. ராஜேஷ் அதன் இரு கைகளையும் பிடித்து முரட்டுத்தனமாகத் தூக்கி அப்படியே சோபாவில் கொண்டுபோய் தொப்பென்று உட்கார்த்தி வைத்தான்.

வீ.சி. ஆரில் கார்ட்டூன் கேஸட்டைச் செருகி ஆன் செய்தான். அழுதுகொண்டிருந்த அபிராமியின் முகத்தைக் கோபமாக

நிமிர்த்தினான். "இங்கே இன்னொரு நிமிடம் அழுகைச் சத்தம் வந்ததோ, திருகிவிடுவேன், திருகி."

அபிராமி உதடுகளைக் கடித்து அழுகையை மென்று முழுங்க யத்தனித்தாள். டெலிவிஷனில் ஓடத் துவங்கிவிட்ட கார்ட்டூன்களில் பூனையும், எலியும் கண்ணீரின் தடிமனான திரையைத் தாண்டிக் குழப்பமாகத் தெரிந்தன.

ராஜேஷ் சட்டென்று அவள் விழி நீரைத் துடைத்தான்.

"விஷமம் எதுவும் பண்ணாமல் டீ.வி. பார்த்துக்கொண்டிரு.. ஒன்றரை மணி நேரத்துக்குள் வந்துவிடுவோம்.. புரிந்ததா?"

புரிந்தாலும் புரியவில்லை என்றாலும் தலையாட்டுவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதைப் புரிந்துகொண்டிருந்தது அபிராமி.

ராஜேஷ் சீப்பெடுத்து தன் தலை முடியை சீர் செய்துகொண்டு ஆணியில் தொங்கிய கார் சாவிக் கொத்தைப் பறித்துக்கொண்டு படிகளில் இறங்கினான்.

"அம்மாவுக்கு டாட்டா சொல்லும்மா" என்று பாரதி சொன்னபோது அபிராமி முகத்தைத் திருப்பிக்கொண்டது.

"இந்த வயசுலேயே என்ன திமிர் பார்.." என்று உரக்கவே முணுமுணுத்துக்கொண்டு, பாரதி படியிறங்கிப் போனாள்.

அபிராமி சோபாவிலிருந்து இறங்கி மாடிப் படிக்கட்டுகளின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டிருந்த மரவேலியருகே வந்து நின்று பார்த்தது.

அம்மாவும், அப்பாவும் வெளியேறிக் கதவைச் சாத்தும் வரை காத்திருந்துவிட்டு, வாய்விட்டு அழ ஆரம்பித்தது.

காரேஜிலிருந்து காரை எடுத்து வெளியே வந்தான் ராஜேஷ். பாரதி, காரேஜின் ஷட்டரை இழுத்து இறக்கிவிட்டு, அவனுடன் முன் இருக்கையில் அமர்ந்தாள்.

"வேலைக்காரி வரட்டும். நாளைக்கு அவளை வேலையிலிருந்தே நிறுத்திவிடப்போகிறேன். அவள் இன்றைக்கு மட்டம் போட்டதால்தானே இத்தனை தகராறு? குழந்தையை வைத்துப் பூட்டிக்கொண்டு போக வேண்டியிருக்கிறது."

"நீ இன்னும் முக்கால் மணி நேரம் முன்னால் கிளம்பியிருந்தால், அபிராமியைக் கொண்டுபோய் அவள் ஃப்ரெண்ட் வீட்டில் விட்டிருக்கலாம்.."

"ஆமாம். விட்டிருக்கலாம்" என்று அவன் குரலிலேயே பழித்துக் காட்டினாள் பாரதி. "பார்ட்டிக்கு வருகிறவர்கள் எல்லாம் ஜம், ஜம்மென்று டிரெஸ் பண்ணிக்கொண்டு வரப்போகிறார்கள். நான் மட்டும் முக்கால் மணி நேரம் முன்னதாகவே மேக்கப் போட்டுக்கொண்டு, வியர்வையில் எல்லாம் கரைந்து போய்

அசிங்கமாய் நிற்கவேண்டுமாக்கும்.."

"சரி சரி.. முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொள்ளாதே. போட்டிருக்கும் மேக்கப் எல்லாம் வேஸ்ட் ஆகிவிடப் போகிறது.." என்று கியரைப் பொருத்தி காரைக் கிளப்பினான்.

தூரத்தில் வானத்தில் முதல் மின்னல் வெடித்தது.

***

அபிராமிக்கு முதுகு குலுங்கியது.

டெலிவிஷனில் ஓடிக்கொண்டிருக்கும் கார்ட்டூனை கவனிக்கும் மூடு இல்லை. பஞ்சடைத்த சின்ன பொம்மையிடம் எத்தனை நேரம்தான் கொஞ்சி விளையாடிக்கொண்டிருப்பது? அழுது அழுது போரடித்துவிட்டது. தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்ததிலும் அப்பா அம்மா பேரில் கோபம் கோபமாக வந்தது.

அப்பாவையும், அம்மாவையும் காரில் வைத்துப் பூட்டி நடுக்கடலில் தூக்கிப் போட்டால்தான் அவர்களுக்கும் பூட்டி வைத்தால் எவ்வளவு கஷ்டம் என்பது புரியும். ஐயையோ, அப்பாவும், அம்மாவும் நடுக்கடலில் மாட்டிக்கொண்டால் அப்புறம் யார் வந்து கதவைத் திறப்பார்கள்?

திடீரென்று ஜன்னல் கதவு அறைந்து மூடியது. உடனே அதே வேகத்தில் திறந்து படபடவென்று அடித்துக்கொண்டது.

அபிராமி திடுக்கிட்டது. வெளியே வானம் இருட்டியிருந்தது. காற்று சீறி சீறி வீசியது. தோட்டத்தில் நின்றிருந்த பிரமாண்டமான புளிய மரம் தன் நூறு கைகளையும் நீட்டி அசைத்து அவளை வா வா என்று அழைத்த மாதிரி இருந்தது.

தாள் போடாத ஜன்னல் கதவு காற்றில் கழுகின் சிறகு போல படபடவென்று அடித்துக்கொண்டது.

அபிராமிக்கு ஜன்னல் கதவு எட்டியது. ஆனால் அதன் மத்தியில் இருந்த கொக்கி எட்டவில்லை. அபிராமி ஸ்டூலை எடுத்துப் போட்டு ஏறியது. கதவு கைக்கு அகப்படாமல் வெளிப்புறம் திறந்துகொண்டது. மறுபடி இழுத்துப் பிடித்தபோது காற்றுக்கு எதிராக செயல்படுவது அவளது பிஞ்சுக் கைகளுக்குக் கஷ்டமாயிருந்தது. வானில் இன்னொரு பிரமாண்ட மின்னல் சிதறியது. அந்த திடீர் வெளிச்சத்தின் கூச்சத்தில் கண்களை அவள் தன்னிச்சையாக மூடிக்கொள்ள, தடதடவென்று பெரும் சத்தத்துடன் இடி ஒன்று வானில் உருண்டது.

அபிராமி மிகவும் பயந்தாள். ஸ்டூலிலிருந்து தடுமாறிக் கீழே விழுந்தாள். உடம்பு பூராவும் அதிவேகத்துடன் ரத்தம் பம்ப் செய்யப்பட, அந்த திகிலில் இதயம் வலிக்க ஆரம்பித்தது. மூச்சிரைத்தது. கண்களை மூடிக்கொண்டு, உடம்பைக் குறுக்கிக்கொண்டு

காதுகளைப் பொத்திக்கொண்டு அபிராமி உட்கார, வானில் அடுத்த மின்னல் வெட்டியது. வெட்டிய மின்னல் என்ன மாயம் செய்ததோ, சட்டென்று மின்சாரம் அறுந்து போனது. இருட்டு, கும்மிருட்டு.

அந்தப் பிரதேசம் முழுவதுமே மின்சாரம் போய்விட்டது.

அபிராமி பயத்தில் பாவாடையை நனைத்தது.

தொண்டையில் அலறல் உருவாகி வெளிவராமல் திக்கியது.

அப்பா ரூமில் டார்ச் இருக்குமே. அப்பாவின் ரூம் எந்த திசையில் இருக்கிறது? சுவரைத் தடவியபடி அபிராமி நகர்ந்தது. டெலிபோன் வைத்த ஸ்டூல் காலில் தடுக்கிவிட்டது. அது கீழே புரண்டு டெலிபோன் இரண்டாக உடையும் சத்தம் அபிராமியின் வயிற்றில் இன்னொரு அச்ச ஈட்டியைச் பாய்ச்சியது. டெலிபோன் ஒயர் காலில் மாட்டி இழுக்க, அபிராமி யாரோ தன் காலைப் பிடித்து இழுக்கிறார்கள் என்று நினைத்து வீல் என்று அலறியது. பக்கத்து வீட்டு ஜன்னலில் அவர்கள் வீட்டில் ஏற்றி வைத்த மெழுகுவத்தியின் வெளிச்சச் சதுரம்.

அபிராமிக்கு மூச்சு வந்தது. ஏதோ கொஞ்சமாவது வெளிச்சம் தெரிகிறதே. சுவரைத் தடவியபடி அப்பாவின் அறை நோக்கி நகர்ந்தது. திடீரென்று ம்யாவ் என்று இருட்டிலிருந்து ஒரு ஒலி.

அபிராமி பதறி நின்றது. சரசரவென்று பூனைப்பாதங்கள் தரையில் ஓடும் ஒலி.

வெளியே வானம் பொத்துக்கொண்டு, மழை பொழிந்தது. மின்னலும், மிகச் சிறு இடைவெளிவிட்டு இடியும் அதிரடித்தன.

அபிராமி அவள் அப்பாவின் ரூம் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தது.

ஜன்னலுக்கு வெளியே திடீர் மின்னலில் பிரமாண்டமான மரம் ஒரு ராட்சஸன் போல கண நேரத்துக்குத் தெரிந்துவிட்டு மறைந்தது.

அபிராமிக்கு தைரியம் போய்விட்டது. அந்த முழு இருட்டு அறைக்குள் தனியே நுழைந்தால் தன்னை யாராவது இழுத்து விழுங்கிவிடுவார்கள் என்பது போன்ற பயம்.

கதவருகே தயங்கி நின்று, தனக்குத் தெரிந்த கடவுள் சுலோகத்தைச் சொல்ல முனைந்தது. நடுக்கத்தில் மந்திரம் நினைவுக்கு வரவில்லை. ஈரமாகிவிட்ட பாவாடை வேறு கால்களில் சப்பையாக ஒட்டிக்கொண்டு குறுகுறுத்தது.

திடீரென்று காற்றில் கதவு அறைந்துகொண்டது. குறுக்கில் நின்ற அபிராமியைக் கதவு முதுகில் மோதி அறைக்குள் தூக்கி எறிந்தது.

அபிராமி உச்ச பயத்தில் அலறியது.

இன்னொரு பிரமாண்ட மின்னல். உலகத்தை வெடிக்கும் இடி. இடி நேரே அந்த வீட்டின் ஒரு புறத்தைத் தாக்க, கான்கிரீட் அதிர்ந்தது. ஜன்னல் பெயர்ந்துகொள்ள வெளியே மிக நெருக்கத்தில்

வளர்ந்திருந்த மரத்தில் இடியின் தாக்குதல் காரணமாக முறிவு ஏற்பட்டு, ஜன்னலையும், அதனுடன் கொஞ்சம் சுவரையும் பெயர்த்துக்கொண்டு ஒரு பெரிய கிளை அறைக்குள் சரிந்தது.

விழுந்த கிளை நேரே அபிராமியின் முதுகின் மேல் புறம் பாய்ந்தது. அபிராமிக்கு எது தன்னைத் தாக்கியது என்று பிரக்ஞை ஏதும் இல்லாமல் நினைவு முற்றிலும் நழுவிப் போனது.

வெளியே மின்னல் ஒன்று ஜன்னல் வழியே அபிராமியை எட்டிப் பார்த்தது.

1

ஸ்பீக்கர்களில் கடவுள் வாழ்த்து ஒலித்துக்கொண்டிருந்தது.

ஒரே மாதிரி சீருடை அணிந்த நூற்று ஒன்பது குழந்தைகளும் மைதானத்தில் அந்த இசைக்கு ஏற்ப கைகூப்பி வாய்விட்டு பாடிக்கொண்டிருந்தார்கள்.

கடவுள் வாழ்த்து முடிந்ததும், கிழக்கு மத்தியில் போடப்பட்ட சிமெண்ட் மேடையில் அவர் ஏறினார்.

'ஐயா, ஐயா' என்று அந்தக் குழந்தைகளால் அன்புடன் அழைக்கப் பெறும் நடராஜன் – கதர் வேட்டி, கதர் சட்டை, கறுப்பு பிரேம் போட்ட தடிய கண்ணாடி, எளிமையான செருப்புகள்.

மேடையில் நடுவில் வந்து நின்றுகொண்டார். குழந்தைகள் மொத்தமும் மெஸ்மரைஸ் பண்ணப்பட்டவை போல அவரையே கூர்ந்து நோக்கினர்.

நடராஜன் தன் கணீரென்ற குரலில் பேசினார்.

"நான் சொல்லும் நான்கு பேரைத் தவிர மற்றவர்கள் தத்தம் வகுப்புகளுக்குப் போகலாம்.."

குழந்தைகள் என்னென்ன பெயர்களை அவர் சொல்லப் போகிறாரோ என்று ஆவலுடன் பார்த்தன.

"அபிராமி, அர்ச்சனா, அனுசூயா, அஞ்சலி.."

பெயர் சொல்லி அழைக்கப்பட்ட நான்கு பெண் குழந்தைகளும் மேடை நோக்கி நகர்ந்தன. மற்ற குழந்தைகள் வரிசையாக வகுப்புகள் நோக்கி நகர்ந்தன.

நடராஜன் அந்த நான்கு குழந்தைகளும் பின்தொடர அந்தக் கட்டிடத்தின் காரிடாரில் நடந்தார். தன் அறை வந்ததும் நின்று கதவைத் திறந்தார்.

நான்கு குழந்தைகளும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டன. உள்ளே தங்களுக்கு தண்டனை காத்திருக்கிறதா, பரிசு காத்திருக்கிறதா என்று புரியாத சஸ்பென்ஸுடன் நான்கும் உள்ளே நுழைந்தன.

நடராஜனின் பழைய தேக்கு மேஜைக்கு எதிரே போடப்பட்ட பெஞ்சில் உட்கார்ந்திருந்த இரண்டு பேரும் அவரைப் பார்த்ததும் எழுந்தனர்.

"குட்மார்னிங் அன்க்கிள், குட்மார்னிங் ஆன்ட்டி.." என்று குழந்தைகள் கோரஸாகச் சொல்லின. அந்தப் பள்ளிக்கூடத்துக்கு வரும் எந்த விருந்தினர்க்கும் இந்த மரியாதை தரப்பட வேண்டும் என்று அத்தனை குழந்தைகளும் பழக்கப்படுத்தப்பட்டிருந்தன.

நடராஜன் தன் நாற்காலியில் உட்கார்ந்தார்.

"நீங்கள் கேட்டபடி 'அ' வில் பெயர் ஆரம்பிக்கும் குழந்தைகளை

அழைத்து வந்திருக்கிறேன். இது அபிராமி – பன்னிரண்டு வயது. இந்த விடுதியில் பதினோரு வருடமாக இருக்கிறாள். இது அஞ்சலி, மூன்று வயது. அப்பா அம்மா இரண்டு பேருமே ஒரு கார் கிராஷில் செத்துப் போனதால் பிறந்த மூன்றாவது மாதமே இங்கே வந்து சேர்ந்துவிட்டது. இது அர்ச்சனா, ஏழு வயது. அப்பா யார் என்று தெரியாது. அம்மா யார் என்று தெரியாது. யாரோ தைரியமில்லாமல் ராத்திரியோடு ராத்திரியாக குழந்தையை விடுதி வாசலில் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இது அனுசூயா, நான்கு வயது. கைது செய்யப்பட்டு இப்போது சிறையில் இருக்கும் ஒரு கொலைகாரியின் குழந்தை இது. போலீஸால் இங்கே வளர்க்கப்படுகிறது. இந்தக் குழந்தைகளில் எந்தக் குழந்தையை நீங்கள் தத்து எடுத்துக்கொள்ள விரும்புகிறீர்கள்?"

நடராஜன் பேசி முடித்ததும் நான்கு குழந்தைகளும் வரிசையாக நின்றன.

"எங்கள் குழந்தை பெயரும் அபிராமிதான். அதனால் அபிராமியை தத்து எடுக்கலாம் என்று முதலில் தோன்றியது. ஆனால் எங்கள் அபிராமிக்கு ஏழு வயது. இந்த அபிராமி ஐந்து வருடம் மூத்தவள், அர்ச்சனாவை எங்களுக்குப் பிடித்திருக்கிறது. என்ன சொல்கிறாய், பாரதி.."

"ஆமாம், ராஜேஷ். அர்ச்சனாதான் நம் அபிராமி போல அதே உயரத்துடன், அதே பெரிய கண்களுடன் இருக்கிறாள். அர்ச்சனாவைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது.."

"அர்ச்சனாவைத் தவிர மற்ற மூன்று பேரும் வகுப்புக்குப் போங்கள்.." என்றார் நடராஜன்.

மற்ற மூன்று பேரும் அந்த அறையைவிட்டு வெளியேறினர்.

"உங்களிடம் குழந்தைகளுக்கு நிறைய மரியாதை இருக்கிறது"

"ஆமாம் மிஸ்டர் ராஜேஷ். நானும் குழந்தைகளிடம் அன்பாகத்தான் இருக்கிறேன். இருபது வருடமாக இந்த விடுதியை நிர்வாகம் செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய சொத்து முழுவதும் இந்த விடுதிக்குத்தான் எழுதி வைத்திருக்கிறேன். கவனிப்பாரில்லாத குழந்தைகள்தான் நாளைய திருடர்களாகவும் கயவர்களாகவும் உருவாகிறார்கள் என்பது என் எண்ணம். அதனால் குழந்தைகளை நல்லபடி வளர்ப்பதற்காகத்தான் இந்த விடுதியையே ஆரம்பித்தேன்.. இந்த விடுதியிலிருந்து குழந்தையை தத்து எடுக்க விரும்புகிறவர்களுக்கு தத்து கொடுப்பதுண்டு. ஆனால் ஒரு வருடம் கழித்து மறுபடியும் அந்தக் குழந்தையை அழைத்து விசாரிப்பேன். அந்தக் குழந்தைக்கு பிரியமிருந்தால் அங்கேயே தொடர்ந்து இருக்கலாம், அல்லது விடுதியிலேயே மறுபடி

சேர்த்துக்கொண்டுவிடுவேன்.. அதற்கான ஒப்பந்தப் பத்திரத்தில் நீங்கள் இருவரும் கையெழுத்திட வேண்டும்.."

நடராஜன் தன் மேஜை இழுப்பறையிலிருந்து டைப் அடிக்கப்பட்ட சில காகிதங்களை வெளியே எடுத்து காலியாய் இருந்த இடங்களில் பெயர்களை நிரப்பினார்.

"உங்கள் பெயர் ராஜேஷ், மனைவி பெயர் பாரதி. கரெக்டா?"

"கரெக்ட் சார்."

"மெட்ராஸ்தானே இரண்டு பேரும்?"

"ஆமாம் சார்."

"மெட்ராஸிலேயே எத்தனையோ அநாதை விடுதிகள் இருக்குமே.. அதையெல்லாம் விட்டுவிட்டு, கொடைக்கானலில் இருக்கும் என் விடுதிக்கு வந்திருக்கிறீர்கள்?"

"ஒரு தடவை ஆனந்த விகடனில் உங்கள் விடுதி பற்றி எழுதியிருந்ததைப் படித்ததிலிருந்து இங்கிருந்துதான் குழந்தையை தத்து எடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தோம். இங்கு நீங்கள் வளர்க்கும் குழந்தைகள் முத்து முத்தாக இருக்கும் என்றும் படித்தோம்.."

"பெண் குழந்தைதான் வேண்டும், அதிலும் பெயர் 'அ' வில் ஆரம்பிக்க வேண்டும் என்றதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் உண்டா?"

"செத்துப்போன எங்கள் மகள் பெயர் அபிராமி.. அதனால் 'அ' வில் ஆரம்பிக்க வேண்டும் என்று ஒரு சென்டிமெண்ட். அவ்வளவுதான்.."

"எப்படி செத்துப்போயிற்று – ஜுரம் என்றா சொன்னீர்கள்?"

"அ.. ஆமாம்.." ராஜேஷும், பாரதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர், "ஏதோ வைரஸ் ஃபீவர், ஆளையே அடித்துவிட்டது" என்றான் ராஜேஷ்.

"மிஸ்டர் ராஜேஷ்.. குழந்தையைத் தத்து எடுப்பதற்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் இந்த விடுதிக்கு நன்கொடை தர வேண்டும். குழந்தையை விலைக்கு விற்பதாக நீங்கள் தப்பாக நினைத்துக்கொள்ளாதீர்கள்.. மற்ற குழந்தைகளுக்கான பராமரிப்பு செலவிற்காகத்தான் கேட்கிறேன்.."

"பணம் என்ன சார் பணம்? இனிமேல் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் எங்கள் அபிராமி எங்களுக்குத் திருப்பிக் கிடைக்கப் போகிறாளா, என்ன?"

"அர்ச்சனா.. ஓடு.. உன் துணிகளை எடுத்துக்கொண்டு சீக்கிரம் வா" என்றார் நடராஜன்.

அர்ச்சனா துள்ளிக்கொண்டு ஓடியது.

"நீங்கள் குழந்தை வளர்க்காதவர்கள் இல்லை. இருந்தாலும் நான்

என் மன சாந்திக்காகச் சொல்கிறேன்" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார் நடராஜன்.

"குழந்தைகள் நார்மலாக சுறுசுறுப்பாகத்தான் இருக்கும். ஒரு இடத்தில் கட்டிப் போட முடியாது. இங்கும், அங்கும் ஓடி துள்ளிக்கொண்டுதான் இருக்கும். நீங்கள்தான் விட்டுப்பிடிக்க வேண்டும். கூடியவரை அரவணைத்துக்கொண்டு போங்கள். உங்கள் அன்பும், கவனமும் இருக்கிறது என்று தெரிந்தால் குழந்தைகள் ஆரோக்கியமாக, சந்தோஷமாக வளரும்.."

"புரிந்திருக்கிறது சார்.. அர்ச்சனாவை எங்கள் சொந்தக் குழந்தை போலத்தான் நடத்துவோம்.."

"நீங்கள் அன்பு வைத்திருந்தால் மட்டும் போதாது, மிஸ்டர் ராஜேஷ். அன்பைக் காட்ட வேண்டும். வீட்டில் வளரும் செல்லப் பிராணி போலத்தான் குழந்தையும். தட்டிக் கொடுத்து, வருடிக் கொடுத்து மிரட்டவேண்டிய நேரத்தில்கூட செல்லமாக மிரட்டி வளர்த்தால், உங்கள் குடும்பம் மிக மகிழ்ச்சியாக இருக்கும்.."

அர்ச்சனா சாயம் போன ஒரு பையுடன் வந்து நின்றது.

"பையை இங்கே மேஜை மீது வை. அர்ச்சனா.. இந்த அன்க்கிளும், ஆன்ட்டியும் தங்கள் வீட்டுக்கு உன்னை அழைத்துப் போகிறார்கள். நீ அங்கே சமர்த்தாக இருக்க வேண்டும். நல்ல சாப்பாடு போடுவார்கள். நல்ல துணிமணிகள் வாங்கித் தருவார்கள். நல்ல ஸ்கூலிற்கு அனுப்புவார்கள். போகிறாயா?"

"போகிறேன் ஐயா.." என்றது அர்ச்சனா, ஆசையுடன்.

"சரி, பையை வைத்துவிட்டு வா. மற்றவர்களிடமெல்லாம் சொல்லிக்கொண்டு வரலாம்.." என்று நடராஜன் எழுந்தார்.

"இது ரொம்ப நல்ல குழந்தை. எல்லோரிடமும் நட்பாகப் பழகுவதால் எங்கள் விடுதியில் இருக்கும் டீச்சர்களுக்கெல்லாம் இது செல்லக் குழந்தை. தன் சகோதர, சகோதரிகளிடம் சொல்லிக்கொண்டு வந்துவிடட்டும்.."

"சரி, சார். காத்திருக்கிறோம்" என்றான் ராஜேஷ்.

2

ஃபியட் கார் அந்த சரிவில் மெல்ல இறங்கியது.

"அன்க்கிள்"

"என்ன அர்ச்சனா?"

"உங்கள் வீட்டில் கேரம் போர்டு இருக்கிறதா?"

"ஓ!"

"எனக்கு விளையாடத் தருவீர்களா?"

"வீட்டில் இருக்கும் எல்லாமே உன்னுடையதுதான், அர்ச்சனா.." என்றாள் பாரதி, கண்கள் கலங்க.

அர்ச்சனாவை முதல் பார்வையிலேயே அவளுக்குப் பிடித்துவிட்டது.

நல்ல உயரமாக வளரப் போகிற குழந்தை என்பதற்கு ஆதாரமான உடல் அமைப்பு. மிகவும் குதூகல முகம். சின்ன நெற்றி, பெரிய விழிகள். மிக அழகான, அளவான மூக்கு. வரிசை தப்பாத பற்கள். அடர்த்தியான, ஆனால் சரியாக பராமரிக்கப்படாத கூந்தல். மெல்லிய கூரான குரல்.

பாரதி ஆசையுடன் அர்ச்சனாவின் தலையைத் தொட்டாள். அது கூச்சத்துடன் நெளிந்தது.

"உங்கள் வீடு பெரிசா ஆன்ட்டி?"

"இனிமேல் உங்கள் வீடு என்று சொல்லக் கூடாது.. நம்ம வீடு என்று சொல்ல வேண்டும்.." என்றான் ராஜேஷ் – இடது கையால் அதன் தோளைத் தொட்டு அணைத்து.

அர்ச்சனா களுக் என்று சிரித்தது.

"எனக்கு ஒரு கோல்ட் ஸ்பாட் வாங்கித் தருவீர்களா, அன்க்கிள்?"

"கோல்ட் ஸ்பாட்டா? ஓ..!"

அந்தப் பாதையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை எந்தக் கடையும் இல்லை.

"காரைத் திருப்புங்கள். கடைத் தெருவிற்குப் போகலாம்" என்றாள் பாரதி.

"வேண்டாம். கடை எங்கே வருகிறதோ அப்போது வாங்கித் தந்தால் போதும் ஆன்ட்டி.."

"நோ, நோ. நீ முதல் முதலில் வாய் திறந்து கேட்டிருக்கிறாய். இதுகூட வாங்கித் தராவிட்டால் எப்படி?"

ராஜேஷ் காரைத் திருப்பினான்.

இரண்டு கிலோ மீட்டருக்கு மேல் எதிர் திசையில் ஏறிய பிறகுதான் கடைத் தெரு வந்தது.

கடைத் தெருவிலும் கோல்ட் ஸ்பாட் கிடைக்கவில்லை.

"அடுத்த தெருவில் இருக்கும் கார்னர் ஷாப்பில் விசாரித்துப் பாருங்கள்" என்றார்கள்.

அடுத்த தெருவில் கார்னர் ஷாப்பில் நல்ல வேளையாக கோல்டு ஸ்பாட் இருந்தது.

அர்ச்சனா ஆசை ஆசையாகக் குடித்தது.

நடந்து வந்து மீண்டும் காரில் ஏறினார்கள். டிரைவர் பக்கக் கதவை அறைந்து சாத்தியபோது, சட்டென்று கதவு தொய்ந்துபோனது. காரின் பிரதான உடம்புடன் இணைக்கும் லீவர் கழன்றுகொண்டு கதவு ஆபத்தான நிலையில் தொங்கியது.

"இதென்னடா புதுக்குழப்பம்?" என்றான் ராஜேஷ்.

"மலைப்பாதையில் ஓட்டப் போகிறீர்கள்.. கதவை

சரிப்படுத்திக்கொண்டு போகலாம்" என்றாள் பாரதி.

விசாரித்ததில் இறக்கத்தில் இன்னும் இரண்டு கிலோ மீட்டர் தள்ளி ஒரு மெக்கானிக் கடை இருப்பதாகச் சொன்னார்கள்.

"நீங்கள் இரண்டு பேரும் பின் சீட்டில் உட்காருங்கள். மெதுவாக மெக்கானிக் ஷாப்பிற்கு ஓட்டிப் போய்விடுகிறேன்.." என்றான் ராஜேஷ்.

"பார்த்துங்க – அவசரம் வேண்டாம். நிதானமாகவே ஓட்டுங்கள்" என்று பதறினாள், பாரதி.

***

கார் நிதானமாக இறங்கியது.

நாற்பது நிமிடமாயிற்று அந்த மெக்கானிக் ஷாப்பைக் கண்டுபிடிக்க.

"லாக் க்ளிப் கழன்றுவிட்டது. வெல்டு பண்ண வேண்டும், நான்கு மணி நேரமாகும் ரெடியாக.." என்று சொல்லிவிட்டான், மெக்கானிக்.

நேரத்தைக் கடத்துவதற்கு வழி புரியாமல் பார்க்கிலும், கொஞ்ச நேரம் படகிலும், சிறிது நேரம் மலைப்பாதையில் நடந்தும் செலவு செய்தார்கள்.

கார் தயாரானபோது மாலை மணி ஆறு. வானம் இருட்டத் துவங்கிவிட்டது.

ராஜேஷ் டிரைவர் சீட்டில் அமர்ந்தான்.

பத்திரம் கருதி பாரதியும், அர்ச்சனாவும் பின் இருக்கையில் அமர்ந்தார்கள்.

அர்ச்சனா காலையிலிருந்து தன்னைப் பற்றிப் பேசிப் பேசி புதிதாக சொல்வதற்கு எதுவும் இல்லாமல் களைத்துப்போயிருந்தது. பாரதியின் மடியில் தலை வைத்துப் படுத்துக்கொண்டது.

கார் இறக்கத்தில் இறங்கத் துவங்கியது.

சூரியன் முற்றிலும் காணாமல் போய்விட்டான். இருள் ஆக்கிரமிக்கத் துவங்கிவிட்டது. காரின் முன் விளக்குகள் வெளிச்சம் போட்டுக் காட்டிய பாதையில் அந்த ஃபியட் நிதானமான வேகத்துடன் இறங்கிக்கொண்டிருந்தது. ஸ்டீரியோவில் இளையராஜாவின் பாடல் வழிந்துகொண்டிருந்தது.

ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த ராஜேஷின் காதுகளில் திடீரென்று அந்தக் குரல் கேட்டது.

"அப்பா."

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. இது, இது அபிராமியின் குரல் இல்லை?

அதிர்ச்சியில் காரை பிரேக் அடித்து பாதையோரமாக நிறுத்தினான்.

"என்னங்க, என்ன ஆயிற்று? ஏன் திடீரென்று காரை நிறுத்திவிட்டீர்கள்?"

"பாரதி.. உனக்குக் கேட்கவில்லை?"

"என்னது?"

"அபிராமியின் குரல்?"

"அபிராமியின் குரலா? என்ன உளறுகிறீர்கள்?"

"அப்பா என்று அபிராமி கூப்பிடவில்லை?"

"என்ன ஆயிற்று உங்களுக்கு? ஏன் என்னென்னவோ சொல்கிறீர்கள்? என் காதில் அபிராமியின் குரல் எதுவும் கேட்கவில்லை. அர்ச்சனாவும் தூங்கிவிட்டது. எதையாவது கற்பனை செய்துகொண்டிருப்பீர்கள்.."

"இல்லை பாரதி., எனக்கு நன்றாகக் கேட்டது."

"சரி, இருட்டிவிட்டது. இப்படி வழியில் காரை நிறுத்திக்கொண்டிருந்தால், பின்னால் வரும் வண்டி ஏதாவது இடித்துவிட்டுப் போய்விடப் போகிறது.. வண்டியை எடுங்கள்.." என்றாள் பாரதி.

ராஜேஷ் குழம்பிய மனதுடன், நெற்றி நிறைய குறுக்குக் கோடுகளுடன், காரை மறுபடி கிளப்பினான். பாதையின் ஓரத்திலிருந்து மத்திக்கு வந்தான்.

விளக்குகளைப் போட்டவுடன் எதிரே கொண்டை ஊசி வளைவு வந்துவிட்டது. டயர்கள் கதறக் கதற காரை மிக லாகவமாக உடைத்துத் திருப்பினான்.

இந்த நேரத்தில் வழக்கமாக போக்குவரத்து இருக்க வேண்டும். ஏன் இவ்வளவு அமைதியாக இருக்கிறது என்பது அவனுக்குப் புரியவில்லை. தூரத்தில் ஒரு சர்ச் தெரிந்தது. திடீரென்று அதன் மீது மின்னல் ஒன்று வெட்டி மறைந்தாற் போலிருந்தது. சர்ச்சின் உச்சியில் சிலுவையைப் பிடித்துக்கொண்டு ஒரு பெண் குழந்தை தலை கீழாகத் தொங்கியதைப் போலிருந்தது.

ராஜேஷ் அரண்டான். காரை வேகம் குறைத்து அந்தப் பக்கம் பார்த்தபோது உண்மையில் அங்கு சர்ச் ஏதும் இல்லை. ஒரு உருட்டையான பாறை மட்டும் மலை முகட்டில் ஒட்டிக்கொண்டிருந்தது. அப்படியானால் அவன் பார்த்த காட்சி?

சர்ச்சும் பொய்? சிலுவையும் பொய்? அதில் தொங்குவதாகப் பார்த்த சிறுமியும் பொய்?

ராஜேஷின் மண்டைக்குள் பகபகவென்று ஏதோ பற்றி எரிந்தது.

"அப்பா"

மறுபடியும் அபிராமியின் குரல்.

"அபிராமி" என்றான், "எங்கேயிருக்கிறாய்?"

“என்ன ஆயிற்று உங்களுக்கு?” என்றாள் பாரதி, குழம்பி.

“அப்பா, உங்கள் மடியில் நான் உட்கார்ந்துகொள்ளட்டுமா?”

“வா கண்ணே..”

“ஐயோ, ஏன் உங்களுக்கு நீங்களே பேசிக்கொள்கிறீர்கள்? காரை ஓரமாக நிறுத்துங்கள்..”

“அப்பா, நான் மடியில் உட்கார்ந்தால் கார் ஓட்டுவது உங்களுக்குக் கஷ்டமாயிருக்குமா?”

“ஒரு கஷ்டமும் இல்லை. அபிராமிக் குட்டி.. நீ தாராளமாக உட்கார்..”

“வலிக்கிறதாப்பா?”

“சீச்சீ.. நீ பூங்கொத்து போல இருக்கிறாய். நீ மடியில் உட்கார்ந்தால் அப்பாவுக்கு எப்படி வலிக்கும்?”

“ஐயோ, ப்ளீஸ் காரை நிறுத்துங்களேன்..”

“அப்பா, காரைக் கொஞ்ச தூரம் நான் ஓட்டட்டுமா?”

“ஓட்டு என் செல்லமே..”

“என்னை ஓட்டச் சொல்லிவிட்டு நீங்கள் ஸ்டியரிங்கைப் பிடித்துக்கொண்டிருந்தால் நான் எப்படி ஓட்டுவது?”

“சரி, கைகளை எடுத்துவிட்டேன்.”

“ஐயையோ” என்று பதறி “என்னங்க, என்னங்க?” என்று பதறி பாரதி அவன் தோள்களைப் பிடித்துக் குலுக்கிய போதும், ராஜேஷ் மறுபடி ஸ்டியரிங்கைப் பிடிக்கவில்லை.

“பார்த்து.. பார்த்து அபிராமிக்குட்டி.. ஹேர்ப்பின் பெண்ட் வரும்போது ஸ்டியரிங்கைத் திருப்ப வேண்டும்., திருப்பு.. திருப்பு.. திருப்பு..” என்று புலம்பினான் – திடீரென்று அலறினான்.

ஸ்டியரிங் திருப்பப்படாமலேயே அந்த கார் பாதை முனையில் இருந்த வளைவின் விளிம்பில் கட்டப்பட்ட சிறு குட்டிச் சுவரை இடித்துத் தள்ளி, எந்தத் தற்காப்பு எண்ணமும் இல்லாமல் மலையிலிருந்து பள்ளத்தாக்கிற்குக் குதித்தது.

3

பாறைகள், மேலும் சில பாறைகள் என்று முட்டி மோதி அந்தக் கார் புரண்டு புரண்டு கீழே கடைசியாக அடங்கியபோது, அதன் முன்புறம் சுத்தமாக நசுங்கிவிட்டது.

கார் ஒருக்களித்துக் கிடக்க முன் இருக்கையின் ஜன்னல் கண்ணாடிக்கு வெளியே பாதி உமிழப்பட்டிருந்தான் ராஜேஷ். அவன் உடம்பின் பல்வேறு இடங்களிலிருந்து ரத்தம் கொப்பளித்துக்கொண்டிருந்தது.

பாரதி வீல் என்று அலறி மயக்கமானாள். அவள் முகமெங்கும் ஜிகினா தெளித்தது போல கண்ணாடித் துண்டங்கள்.

அவள் மடியிலிருந்து புரட்டி எறியப்பட்டு முன் இருக்கையால் அழுத்தப்பட்டு கசங்கிக் கிடந்தது அர்ச்சனா.

காரின் முன் விளக்குகள் நொறுங்கிவிட்டபோதும், பின் விளக்குகள் இன்னும் சிகப்பாய் சிமிட்டிக்கொண்டிருந்தன.

ராஜேஷின் நினைவுதான் முதலில் திரும்பியது. நினைவு திரும்பியதும் உச்ச வலி அவனைத் தாக்கியது. இடுப்புக்குக் கீழே ஏதோ அசைவது போல் இல்லை?

சற்றே கழுத்தை நிமிர்த்திப் பார்த்தான். அவன் முகவாயில் ரத்தம் தோய்ந்த ஒரு ஷூ இடித்தது. அவனுடைய மார்பின் குறுக்கே யாரோ ஷூவுடன் காலைத் தூக்கிப் போட்டிருக்க – இது, இது அவனுடைய ஷூவாயிற்றே? அப்படியானால் மார்பின் குறுக்கே கிடக்கும் கால்?

அவன் காலா? அவனுடைய சொந்தக் காலா?

இடுப்புக்குக் கீழே துண்டிக்கப்பட்டு அவன் மீதே விழுந்திருக்கிறதா, என்ன?

ராஜேஷ் அலறினான், அலறினான். அலறினான்.

அந்த ஷூக்காலை தன் கையாலேயே பிடித்துத் தள்ளிவிட்டு அலறினான்.

ஒரு மயக்க அலை வந்து அவனை சுருட்டிப் போனது.

***

மதுரை மருத்துவமனை.

ஙிக்.. ஙிக்.. ஙிக்.. என்று மண்டைக்குள் எதுவோ தட்டிக்கொண்டிருந்தது.

ராஜேஷ் மெல்ல கண் திறந்தான்.

நேர் மேலே படக் படக் என்று மின் விசிறி சுழன்றுகொண்டிருந்தது. சுவர்களில் வெள்ளை டைல்கள் பதிக்கப்பட்டிருக்க, அவன் முகத்தில் ஆக்சிஜன் கவசம், கையில் துளை போட்டு இறங்கும் ரத்தம், இன்னொரு புறம் க்ளுக்கோஸ் தண்ணீர்.

ராஜேஷிற்கு சட்டென்று அத்தனையும் நினைவில் புரண்டு

மோதியது. எழுந்திருக்க முட்டாள்தனமாக முயற்சி செய்தான். வலி அவனை எட்டு திக்கிலிருந்தும் தாக்கியது.

"மிஸ்டர் ராஜேஷ்.."

கனிவான குரல் ஒன்று முகத்துக்கு வெகு அருகே கேட்டது. கண்களை ஃபோகஸ் செய்தான்.

காக்கி உடுப்பணிந்த ஒரு இன்ஸ்பெக்டரின் முகம் மெல்ல மெல்ல பார்வையின் பகுதிக்குள் நுழைந்தது.

ராஜேஷ் அவர் கண்களைச் சந்தித்தான்.

"ராஜேஷ்.. இப்பொழுது எப்படியிருக்கிறது?"

"நான்.. நான்.."

"மதுரையில் அரசாங்க ஆஸ்பத்திரியில் இருக்கிறீர்கள்.. எப்படி அந்த விபத்து நிகழ்ந்தது? நீங்கள் குடித்துவிட்டு கார் ஓட்டியிருப்பீர்களோ என்று ஒரு சந்தேகம்.. கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் கழித்துதான் உங்கள் காரை யாரோ எதேச்சையாகப் பார்த்துவிட்டு உதவிக்கு ஆட்களைச் சேர்த்து நிமிர்த்தினார்கள்.. நீங்கள் உயிருடன் இருப்பதே ஆச்சரியம்.. விபத்துக்கு வேறு யாராவது காரணமா என்று அறிந்துகொள்வதற்காகத்தான் நான் காத்திருக்கிறேன்.. ஏதாவது லாரியோ, பஸ்ஸோ பொறுப்பில்லாமல் பின்பக்கம் வந்து மோதி, காரைத் தூக்கி எறிந்துவிட்டு, நிற்காமல்கூடப் போய்விட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்"

"லாரி எதுவும் என்னை மோதவில்லை.."

"பின்னே?"

"அபிராமி.. அபிராமி.."

"அபிராமி யார்? உங்கள் மனைவியா, அவர் மடியில் படுத்திருந்த சிறுமியா?"

"என் மனைவி.. அவள் எப்படியிருக்கிறாள்?"

"உயிருடன்தான் இருக்கிறார்கள்.. யார் அபிராமி?"

"செத்துப்போன என் மகள்.. அன்றைக்குத் திரும்பி வந்துவிட்டாள். அவள்தான் காரை ஓட்டினாள். சின்னப் பெண், காரை எப்படி ஓட்டுவது என்று தெரியாமல்.. கவிழ்த்துவிட்டாள் போலிருக்கிறது.. அர்ச்சனா எப்படியிருக்கிறாள்?"

"யார் அந்தச் சிறுமியா?"

"ம்.."

"எல்லோரும் நலம்.." என்று இன்ஸ்பெக்டர் சொன்னபோதே அதில் பொய்யின் விகிதம் அதிகம் இருப்பதாக ராஜேஷிற்கு தொனித்தது.

" இன்ஸ்பெக்டர்.. சற்று நேரம் அவரை அமைதியாக இருக்க விடுவீர்களா?" என்று கண்டிப்பான குரல் கேட்டது. வெள்ளை கோட் அணிந்த டாக்டர்.

ராஜேஷ் மேற்கொண்டு எதுவும் சிந்திக்க விரும்பாதவனாக, சிந்திக்க இயலாதவனாக, கண்களை மூடினான்.

***

கிட்டத்தட்ட அதே நேரம்தான் பாரதிக்கும் விழிப்பு தாக்கியது.

கண்களைத் திறக்க முற்பட்டபோது ஏதோ சூன்யம் உணர்ந்தாள். வலது கண் சுலபமாகத் திறந்தது. இடது கண்?

கையை போர்வைக்குள்ளிருந்து எடுத்து இடது கண்ணைத் தொட்டுப் பார்க்க விழைந்தாள்.

தடிமனான பஞ்சும், துணியும் கைகளுக்குத் தட்டுப்பட்டது. அந்தக் கட்டு இடது கன்னம் பூராவும் வியாபித்திருப்பதையும் அவள் உணர்ந்துகொண்டாள்.

"குட் மார்னிங் மேடம்.," என்றது நட்பான குரல்.

நர்ஸின் சிரித்த முகம்.

"என்.. என்ன ஆயிற்று? எனக்கு?"

"நத்திங் மச்" என்றாள் நர்ஸ். "நீங்கள் அவ்வளவு விபரீதமான விபத்துக்குப் பிறகு உயிரோடு இருப்பதே ஆச்சரியம்.."

"உயிர் இருக்கட்டும்.. என் இடது கண்ணுக்கு என்ன ஆயிற்று?"

"அது வந்து.. வந்து.."

"ப்ளீஸ் சிஸ்டர். சொல்லுங்கள், என்னை ஏமாற்றப் பார்க்காதீர்கள்.. ராஜேஷும், அர்ச்சனாவும் எங்கே?"

"மேடம்.. நீங்கள் எல்லாவற்றையும் தைரியமாக எடுத்துக்கொள்வீர்கள் என்றால் சொல்கிறேன்.."

"சொல்லுங்கள் சிஸ்டர்.."

"காரிலிருந்து நொறுங்கிய கண்ணாடித் துண்டுகள் பாய்ந்து உங்கள் இடது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஸ்பெஷலிஸ்ட்கள் எவ்வளவோ முயற்சி செய்தும்கூட.."

"முயற்சி செய்தும்கூட..?"

"உங்கள் இடது கண்ணைக் காப்பாற்ற முடியவில்லை.. அது சீரழிந்துவிட்ட நிலையில், வேறு வழியில்லாமல் அந்தக் கண்ணையே எடுக்க வேண்டியதாகிவிட்டது.."

"ஓ நோ.."

"பதற மாட்டீர்கள் என்று சொன்னீர்கள்.."

"உங்களுக்குக் கண் போய் விட்டால் பதறாமல் இருப்பீர்களா, சிஸ்டர்?"

"ஷ்.. உணர்ச்சிவசப்படாதீர்கள்.."

"ராஜேஷ்.. ராஜேஷ் உயிருடன்தானே இருக்கிறார்?"

"உங்கள் ஹஸ்பெண்டா மேடம்?"

"ஆமாம்"

“அவர் உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை.. ஆனால்..”

“ஆனால் என்ன சிஸ்டர்? அவரும் குருடாகிவிட்டாரா? ஒரு கண் போயிற்றா? இரண்டு கண்ணுமா?”

“கண்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை..”

“பின்னே?”

“வலது கால் துண்டிக்கப்பட்டுவிட்டது..”

“யூ யூ..”

“பட், ஹீ இஸ் அலைவ்..”

“அர்ச்சனா?”

“அந்தச் சிறுமியா..? அவள் கண்டிஷன்தான் மோசம்.. கோமாவில் இருக்கிறது அந்தக் குழந்தை..”

“கடவுளே” – நெற்றியில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள், பாரதி.

## 4

கிரீஸ் பசியுடன் இருந்த அந்த லிஃப்ட்டின் கதவுகள் கரகரவென்ற சப்தத்துடன் திறந்துகொண்டன.

கோட் பறக்க, டாக்டர் பத்ரி அதிலிருந்து வெளிப்பட்டார். அவருடைய ஆட்டுக்குட்டிகள் போல ஜூனியர் டாக்டர்கள் பின்தொடர்ந்தார்கள்.

மொஸைக் அங்கங்கே பெயர்ந்த அந்த காரிடாரில் நடந்து அவர்கள் 'ஐ.சி.யூ' என்று சிகப்பு மசியில் எழுதப்பட்ட கண்ணாடிக் கதவைத் திறந்து நுழைந்தார்கள். அங்கே இடது புறம் இருந்த சிறு அறையில் ஷூக்களைக் கழற்றிவிட்டு, ஸ்டெரிலைஸ்டு ஷூக்கள் அணிந்தார்கள். மருத்துவரீதியில் கிருமிகள் அற்று சுத்தம் செய்யப்பட்ட ஓவர்கோட்களை அணிந்தார்கள். இன்னும் இரண்டு கண்ணாடிக் கதவுகள் தள்ளித் திறந்தபின் சிறு சிறு கண்ணாடித் தடுப்புகளுக்குப் பின்னே போடப்பட்டிருந்த இன்டன்ஸிவ் கேர் யூனிட்டின் நோயாளிகள் தென்பட்டார்கள்.

"இரண்டாவதாயிருக்கும் பெண்" என்றார் ஜூனியர்களில் சீனியராக இருந்த டாக்டர்.

டாக்டர் பத்ரி அந்தக் கட்டிலை நெருங்கினார். கட்டிலின் கால்மாட்டில் தொங்கிய சார்ட் பேடை எடுத்தார் பார்த்தார்.

"இது இன்று காலை எடுக்கப்பட்ட இ.இ.ஜி. டாக்டர்.. வெறும் நேர்க் கோடுகளாகத்தான் வருகிறது.."

"இம்பாஸிபிள்" என்றார் டாக்டர் பத்ரி. " உயிரில்லாத பிணத்துக்கு எடுத்தால்தான் இ.இ.ஜி. இந்தக் கோடுகளைத் தரும்.. இந்தப் பெண்ணிற்கு பல்ஸ் இருக்கிறது. இதயத் துடிப்பு இருக்கிறது. இ.இ.ஜி.யில் நேர்க் கோடுகள் வர சாத்தியமே இல்லை.."

"இன்று காலை எடுத்த ரிசல்ட் டாக்டர் இது.."

"நோ. மெஷினில் ஏதாவது குற்றம் இருக்கலாம்."

"இந்தப் பெண்ணிற்கு முன்னாலும், அடுத்து அதே மெஷினில் வேறு பேஷன்ட்களுக்கும் இ.இ.ஜி எடுத்தோமே, அதில் எந்த பிராப்ளமும் வரவில்லை டாக்டர்.."

"அந்த சமயத்தில் ஓல்டேஜ் மாற்றம் இருந்திருக்கலாம்.. எதற்குக் குழப்பம்? இன்னொரு இ.இ.ஜி மெஷினில் எடுத்துப் பார்த்துவிட்டால் போயிற்று.."

"யெஸ் டாக்டர்?"

"இந்தப் பெண்ணின் பெயர் இன்னும் எழுதப்படவில்லையே கேஸ்ஷீட்டில்?"

"இன்றைக்குக் காலையில்தான் தெரிந்தது, டாக்டர்.. பெயர் அர்ச்சனா.. கொடைக்கானல் விபத்தில் சிக்கிக்கொண்ட பெண்"

அதற்குள் இரண்டு ஜூனியர் டாக்டர்கள் இ.இ.ஜி. டெக்னீஷியனை

அழைத்து வர, இ.இ.ஜி. மெஷினிடம் கட்டில் தள்ளிப் போகப்பட்டது.

மின்சாரத்தைக் கடத்தக் கூடிய பசை போன்ற திரவம் தலையிலும் நெற்றியிலும் தடவப்பட்டு, இ.இ.ஜி. இணைப்புகள் பொருத்தப்பட்டன. 'எலக்ட்ரோ என்ஸபெலோகிராம்' எனப்படும் முறைப்படி மனித மூளையில் உயிருடன் இருப்பவர்களின் சிறு சிறு மின் அதிர்வுகளைப் பதிவு செய்யும் அந்த மெஷினில் ஒரு ரிப்பன் அகல பேப்பரில் பென்சில்கள் கோடுகள் போடத் துவங்கின.

டாக்டர் பத்ரியின் விழிகள் விரிந்தன.

"சிம்ப்ளி ஸ்டன்னிங்" என்றார். "இரண்டு மெஷின்கள் ஒரே சமயத்தில் தவறு செய்ய முடியாது. அப்படியானால் இந்தச் சிறுமியின் உண்மையான மருத்துவ நிலை என்ன? அவள் உயிருடன் இல்லை. அவள் இறக்கவும் இல்லை. எப்படி இது சாத்தியம்?"

"கோமாவிலிருந்து இந்தப் பெண் மீண்டு எழும் சாத்தியம் இருப்பதாகவும் தெரியவில்லை டாக்டர்.. வெளிப்படையாகப் பார்த்தால் அதிக காயங்கள் இல்லை. ஆனால் மூளையில் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்.."

"எனிவே, நான் நியூரோ ஸ்பெஷலிஸ்ட்டை இன்று இரவு அழைத்து வந்து இந்த இ.இ.ஜி. ரிப்போர்ட்டைக் காட்ட விரும்புகிறேன்.." என்றார் பத்ரி.

அவர் நியூரோ ஸ்பெஷலிஸ்ட் என்று குறிப்பிட்டது அவருடைய மனைவியைத்தான் என்று டாக்டர்களுக்குத் தெரிந்திருந்தது.

நரம்பியலில் பல பரிசோதனைகள் செய்து மருத்துவ உலகிற்கு பல உபயோகமான கட்டுரைகளையும், ரிப்போர்ட்களையும் தொகுத்து வழங்கிய அவர் மனைவி டாக்டர் சந்திரலேகா இந்தியாவில் இருக்கும் நாட்களைவிட வெளிநாடுகளில் இருக்கும் நாட்களே அதிகம்.

டாக்டர் பத்ரி மீண்டும் ஒரு முறை இ.இ.ஜி. எடுக்கச் சொல்லி அதன் வினோதமான தோல்வியை ஜீரணிக்க முடியாமல் அந்தச் சிறுமியை ஆழமாகப் பார்த்தார்.

ஆக்சிஜன் செலுத்தப்பட்டுக்கொண்டிருந்தது. இதயம் தன் துடிப்பை இன்னும் நிறுத்தவில்லை. ரத்த ஓட்டம் மிகவும் மெதுவாக இருந்த காரணத்தால், உடல் உறுப்புகளில் நார்மலான டெம்ப்பரேச்சர் இல்லாமல் பல இடங்களில் குளிர்ந்து இருந்தது.

அர்ச்சனாவின் முகத்தைப் பார்த்தால் அமைதியாக உறங்குவதைப் போலத்தான் இருந்தது. உதடுகளில் ஒரு கவர்ச்சி மிக்க புன்னகை உறைந்துவிட்டதைப் போலத்தான் தோன்றியது.

குழந்தைகளே இல்லாத டாக்டர் பத்ரிக்கு அர்ச்சனாவைப் பார்க்கப் பார்க்க நெஞ்சில் ஈரம் சுரந்தது.

இவ்வளவு அழகான சிறுமிக்கு கோமாவா? அதுவும் மருத்துவக்

கருவிகளுக்கு சவால் விடும் வினோதமான கண்டிஷனா? அவருக்கு வலித்தது. அர்ச்சனாவின் மிருதுவான பாதங்களைத் தடவிக் கொடுத்துவிட்டு அவர் புறப்பட்டார்.

***

வெள்ளை நிற காண்டெஸாவிலிருந்து டாக்டர் சந்திரலேகா முதலில் இறங்கினாள்.

டாக்டர் பத்ரி அவள் பின்னாலேயே இறங்கினார்.

மதுரையில் வானம் முழுதும் மூடி கறுப்பு மேகங்கள் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தன.

"மழை பிய்த்துக்கொண்டு உதறும் போலிருக்கிறது" என்றார் பத்ரி.

"சீஸனில்லாத சீஸனில் மதுரையில் மழை என்பதே ஆச்சரியமாயிருக்கிறது" என்றாள் சந்திரலேகா.

டாக்டர் பத்ரியின் பார்வையில் டாக்டர் சந்திரலேகா என்ற திறமைசாலியைத் தவிர சந்திரலேகா என்ற கச்சிதமான பெண்மணியும் புலப்பட்டாள். முப்பத்தெட்டு வயதாகியும் தன் உடற்கட்டை சிக்கென்று வைத்துக்கொண்டிருப்பதால், இப்போது அவளைப் பார்த்தால்கூட, அவருக்கு ஆண்மகன் என்ற முறையில் கிளர்ச்சி வருவதுண்டு.

லிஃப்டில் ஏறும்போது "மழை மட்டுமா அதிசயம்? நான் காட்டப்போகிற பெண்ணும் ஒரு மருத்துவ அதிசயம்தான்" என்றார் பத்ரி. "நீயும் பார்த்து அதை ஊர்ஜிதப்படுத்திவிட்டால், உடனே மற்ற டாக்டர்களுக்கெல்லாம் இதைத் தெரியப்படுத்தலாம். உலகமெங்கும் இந்தப் பெண்ணை ஆராய விரும்புவார்கள் என்று நினைக்கிறேன். திரிசங்கு நிலை என்பார்களே அது போல இவள் இறக்கவுமில்லை, உயிருடனும் இல்லை.."

லிஃப்ட் மேலே வந்து திறந்தது.

ஆஸ்பத்திரிக்கு வெளியே காற்றும் மழையும் வலுத்தது. நர்ஸ்கள் அவசரம் அவசரமாக ஜன்னல்களை இழுத்து மூட ஆரம்பித்தார்கள்.

பத்ரியும், சந்திரலேகாவும் இன்டன்ஸிவ் கேர் யூனிட்டுக்குள் நுழைந்தார்கள்.

அர்ச்சனாவின் கட்டிலை நெருங்கினார்கள்.

"ஸ்லீப்பிங் பியூட்டி" என்றாள் சந்திரலேகா, அர்ச்சனாவின் அழகில் நெகிழ்ந்து போய். "எவ்வளவு அழகாயிருக்கிறது இந்தப் பெண்! இதைப் போய் விபத்தில் கோமா நிலைக்குத் தள்ளிவிட்டானே, முட்டாள்."

இ.இ.ஜி. மெஷினைக் கொண்டுவந்து இணைப்புகள் கொடுத்து வோல்டேஜை சற்றுக் கூடுதலாக்கினாள் சந்திரலேகா. பழைய கதைதான். உயிரோட்டமில்லாத நேர்க்கோடுகள்.

டாக்டர் பத்ரியும், டாக்டர் சந்திரலேகாவும் அர்ச்சனாவின் கால் பக்கம் நின்று அந்த இ.இ.ஜி. கிராஃபை கவனித்துக்கொண்டிருக்கும்போது, வெளியே பெரிய இடி ஒன்று உருண்டது. வானில் தீப்பந்தம் ஏற்றி அணைத்தது போல ஒரு ராட்சஸ மின்னல் கீறியது.

பத்ரிக்கும், சந்திரலேகாவிற்கும் இடையில் யாரோ இருவரையும் தள்ளிக்கொண்டு நுழைவதைப் போல இருந்தது. இருவரும் சட்டென்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டனர். காற்றைத் தவிர அவர்களுக்கு இடையில் வேறு எதுவும் இல்லை. அப்படியானால் அவர்களுக்கு குறுக்கே வழி பண்ணிக்கொண்டு நகர்ந்தது?

இருவர் வாய்களிலும் கேள்விகள் உருவாகியபோது, அர்ச்சனா படுத்திருந்த கட்டில் அப்படியே பின்புறம் இரண்டங்குலம் நகர்ந்தது.

"எ.. என்ன இது?" சந்திரலேகா பதறினாள்.

கட்டிலில் படுத்திருந்த அசைவில்லாத அர்ச்சனாவின் மீது அலை ஒன்று ஓடுவது போல் அவள் உடலில் ஒரு சிலிர்ப்பு. யாரோ அறைந்து எழுப்பியது போல அவள் தடக் என்று எழுந்தாள். அவளுடலில் பொருத்தப்பட்டிருந்த மருத்துவ இணைப்புகள் அத்தனையும் அந்த திடீர் எழுதலில் துண்டித்துப்போயின.

அர்ச்சனா கட்டிலிலிருந்து கீழே குதித்தாள்.

"ஹே ஹே.." என்று குரல் எடுத்துச் சிரித்தாள்.

"ஏ..ஏய்.." டாக்டர் சந்திரலேகா பின்புறம் நகர்ந்தாள். பத்ரியின் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது.

சென்ற விநாடிவரை உயிர் இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகத்துடன் இருந்த பெண் திடீரென்று முழு வேகத்தோடு குதித்து இறங்கிக் கூச்சலிடுவது அவருக்குப் பெரும் திடுக்கிடலாய் இருந்தது.

அர்ச்சனா கட்டிலில் பொத்தென்று விழுந்தது. கண்களை மிக அகலமாகத் திறந்து உருட்டிப் பார்த்தது.

"என்னைத் தொட முடியுமா?" என்றது.

பத்ரியும், சந்திரலேகாவும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

விபரீதமாக ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்று புரிந்ததே தவிர என்ன என்று அவர்கள் மூளைக்குப் புரியவில்லை.

"அர்ச்சனா.." – டாக்டர் சந்திரலேகா சற்று நிதானமானவுடன் குரல் கொடுத்தாள்.

"என்ன சந்திரலேகா?" என்றது அர்ச்சனா, கட்டிலிலிருந்து.

திடுக்கிட்டாள். கோமாவில் இருந்த குழந்தைக்கு இது எந்த இடம் என்று புரிவதே கஷ்டம். ஆஸ்பத்திரியா, வீடா என்பதே புரியாத நிலை. டாக்டர்கள் வந்து பார்த்ததுகூட தெரிந்திருக்க முடியாது. அப்புறம்

எப்படி தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறது இந்தச் சிறுமி?

"உனக்.. உனக்கு என் பெயர் எப்படித் தெரியும், அர்ச்சனா?"

"அபிராமி சொன்னாள்.."

"அபிராமியா? யார் அது?"

"நான்தான்" என்று அர்ச்சனா மறுபடி சிரித்தது.

"ஸம்திங் ரேடிக்கல்லி ராங்" என்றார் பத்ரி.

"நத்திங் இஸ் ராங், ஐம் அப்ஸொல்யூட்லி, கிளினிக்கலி அண்ட் மென்ட்டலி ஆல்ரைட்" என்றது அர்ச்சனா, பளிச் என்று.

"என் அப்பாவிற்கு கால் முறிந்துவிட்டதாமே.."

"அப்பாவா? யாரைச் சொல்கிறாய்? ராஜேஷையா?"

"ஆமாம், ராஜேஷிற்கு வலது கால் போயிற்று. என் அம்மா பாரதிக்கு இடது கண் போயிற்று. எந்த பாதிப்பும் இல்லாமல் தப்பியது நான்தான், இல்லை?"

"இன்க்ரெடிபிள்!" என்றார் டாக்டர் பத்ரி, நம்ப முடியாமல்.

"ஜோசியக்காரனைப் போல இருந்த இடத்தில் இருந்துகொண்டே எல்லாவற்றையும் சொல்கிறது பார், இந்தக் குழந்தை."

"அர்ச்சனா.."

"ம்..?"

"கொஞ்சம் எழுந்து உட்காரேன்.."

அர்ச்சனா கட்டிலின் நுனியில் உட்கார்ந்தது.

"என்ன நடந்தது, எப்படி கார் கவிழ்ந்தது நினைவிருக்கிறதா?"

"காரைக் கவிழ்த்ததே நான்தானே."

"என்னது?"

"லேகா.. லீவ் ஹர்.. அவளுக்கு அடிபட்டதில் மூளையில் பெரும் அதிர்வு ஏதோ ஏற்பட்டிருக்கிறது.. அவளுக்கு எதிரில் நாம் டிஸ்கஸ் பண்ணுவதுகூட நியாயமில்லை.." என்று பத்ரி, சந்திரலேகாவின் கையைப் பற்றி அழுத்தினார்.

"அவளுக்கு கொஞ்சம் ஸெடடிவ்ஸ் தேவை.. இவ்வளவு எக்ஸைட்டடாகப் பேசுவது அவளுக்கு நல்லதல்ல" என்று டாக்டர் சந்திரலேகா, நர்ஸைக் கூப்பிட்டாள்.

அர்ச்சனா திமிறத் திமிற அவளுக்கு ஊசி போடப்பட்டது. ஊசியின் மூலம் செலுத்தப்பட்ட மருந்து அவளுடைய நரம்புகளைத் தட்டித் தாலாட்டியது.

கைகளையும், கால்களையும் உதறிக்கொண்டிருந்தவள், சற்று நேரம் சென்று மெல்ல அடங்கிப் போனாள்.

***

"உன் ஒப்பீனியன் என்ன லேகா?" என்றார், டாக்டர் பத்ரி.

கேட்ட இடம் அவர்களது வீடு, நேரம் இரவு. படுக்கையறை, சற்றே

மெலிதான நைட் கவுன் வழியே சந்திரலேகா உள்ளே அணிந்திருந்தவைகள் புலப்பட்ட போதையான சூழ்நிலை. வெளியே கிளுகிளுப்பான மழை.

ஆனாலும் டாக்டர் பத்ரியின் மனதெங்கும் வியாபித்திருந்தது அந்தக் கேள்வி. கோமாவிலிருந்து எழுந்த பெண் எப்படி சட்டென்று அத்தனை தூரம் பேசியது? உடம்பில் எந்தக் களைப்புமில்லாமல் துள்ளி எழுந்தது?

"அதிசயம்தான்" என்றாள் சந்திரலேகா. "ஆனால் ஓரேயடியாக அதிசயம் என்று சொல்லி பத்தடி தள்ளி நின்று பயத்துடன் பார்க்க வேண்டிய விஷயமில்லை என்றே எனக்குத் தோன்றியது."

"எப்படிச் சொல்கிறாய்?"

"பெர்ஃபேஷியல் லாஸ் ஆஃப் மெமரி இருந்திருந்தால்கூட கோமா போன்ற ஸ்டேஜில் நினைவில்லாமல் கிடக்கும்.. ஆழமாக அத்தனை நினைவுகளும் அழிக்கப்படவில்லை. விபத்தின் அதிர்ச்சியில் மேலோட்டமாக மூளை இயங்காமல் மரத்துப் போயிருக்கலாம். அதுகூட முழு அளவில் இல்லாமல் சற்று அரைத்தூக்கத்தில் இருந்திருக்கலாம். இ.இ.ஜி கருவி இயங்காமல் போனதற்கு மருத்துவ ரீதியாக நாம் காரணம் கண்டுபிடிக்க வேண்டும்தான். சர்க்யூட்டில் ஏதோ ஒரு புள்ளியில் தொடர்பு அறுந்திருக்கலாம், அர்ச்சனாவின் மூளையில்.."

"உன் பெயரை எப்படிச் சொன்னாள்?"

"அரைத் தூக்க நிலையில் சந்திரலேகா மாலை வந்து ஆராயப் போவதாக மற்ற டாக்டர்கள் பேசியது அவள் நினைவில் மேலோட்டமாகப் பதிந்திருக்கலாம். ராஜேஷிற்கு கால் போனதும், பாரதி கண் இழந்ததும் பற்றிக்கூட நர்ஸ்கள் பேசிக்கொண்டிருந்ததெல்லாம் அவள் நினைவுகளில் அலைமேல் விழும் குப்பை போல் சேர்ந்திருக்கலாம். விழிப்பு வந்ததும், அத்தனைக் குப்பைகளையும் அந்த அலை அடித்து கரை சேர்த்துவிட்டது."

"அபிராமி என்று பெயரை மாற்றிச் சொன்னது?"

"ராஜேஷிடம் விசாரித்தேன். இவளை எந்த விடுதியிலிருந்து கூட்டி வந்தாரோ, அந்த விடுதியில் அபிராமி என்ற பெயரிலும் ஒரு பெண் இருந்தாளாம். ராஜேஷின் இறந்து போன மகளின் பெயரும் அபிராமிதான். அந்த அபிராமியை இழந்துவிட்டதால்தான் இந்தப் பெண்ணையே தத்து எடுத்திருக்கிறார்கள். அபிராமி என்ற பெயர் அவள் நினைவுகளில் ரீங்காரம் செய்துகொண்டேயிருந்திருக்க வேண்டும். தானும் அபிராமியும் ஒன்றே என்று அது நினைத்திருக்க வேண்டும்.."

"இத்தனை கேள்விகளுக்கும் தெளிவாக பதில் சொன்னாயே. அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொண்டு நாம் நின்றபோது நமக்கு நடுவில் யாரோ நுழைந்து போனாற்போலிருந்ததே, அது என்ன?"

"அது என்ன? தெரியாது. மருத்துவத்தில் அதற்கு பதில் இல்லை. வெளியே வலுத்த காற்றும், பலத்த மழையும் பெய்ததால், ஒருவேளை காற்றுகூட நமக்கு நடுவே ஒரு சக்தியுடன் பாய்ந்து கடந்திருக்கலாம்.."

"நம்பச் சொல்கிறாயா?"

"நானே நம்பவில்லை.. வேறு பொருத்தமான விளக்கம் கிடைக்கும்வரை இதை நம்பினால் தப்பில்லை என்கிறேன்.. அந்தப் பெண்ணை இன்னும் கொஞ்ச நாட்கள் நம் பார்வையிலேயே வைத்திருந்தால் வேண்டுமானால் அவளைப் பற்றி நாம் எல்லாக் கோணங்களிலும் ஆராய முடியும்.."

"கேட்டுப் பார்த்துவிட்டேன். ராஜேஷ் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த ஆஸ்பத்திரியே அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம். சென்னையில் அவர்கள் கம்பெனியின் நர்ஸிங் ஹோமிற்கு மாறிவிட வேண்டும் என்று சொல்கிறார், ராஜேஷ்.. அதற்கான ஏற்பாடுகளைக்கூட அவருடைய கம்பெனி செய்துவிட்டதாம்.."

டாக்டர் சந்திரலேகா கொட்டாவி விட்டாள்.

"காலை ஐந்து மணிக்கு ஒரு சர்ஜரி இருக்கிறது.."

"சந்தோஷமான நேரத்தில் கேஸ் பற்றிப் பேசி ஏன் வீணடிக்கிறீர்கள் என்கிறாய்? அதுவும் கரெக்ட்தான்.."

டாக்டர் பத்ரி பெட்ரூம் விளக்கை அணைத்தார்.

5

சென்னை.

காலை முழுதும் அனல் வீசிக் களைத்துவிட்ட சூரியன் மேற்கு மலைகளுக்குப் பின்னே படுக்கப் போயாயிற்று.

மாருதி வேன் அந்த வீட்டு போர்ட்டிக்கோவில் வந்து நின்றது. கதவு திறந்தது. முதலில் இரண்டு ஊன்றுகோல்கள் தரையைத் தொட்டன. அந்த பலத்தில் காரிலிருந்து ஒற்றைக் காலுடன் இறங்கினான், ராஜேஷ்.

வாசல் அருகிலேயே சக்கர நாற்காலி காத்திருந்தது. அதைத் தள்ளிச் செல்ல நர்ஸ் காத்திருந்தாள்.

"அன்க்கிள்" வீட்டுக்குள்ளிருந்து அர்ச்சனா ஓடி வந்தது. "இந்த டிரெஸ் நன்றாய் இருக்கிறதா அன்க்கிள்?"

வெள்ளை நிறத்தில் தேவதைகள் அணிவது போன்ற கவுன் ஒன்றை அணிந்திருந்தது.

"அட்டகாசமாக இருக்கிறது" என்று சிரித்தான், ராஜேஷ்.

டொக், டொக் என்று கோல்களை ஊன்றி ராஜேஷ் சக்கர நாற்காலியை அடைந்து அதில் அமர்ந்தான்.

"அக்கா, அக்கா நான் தள்ளிப் போகிறேன், அக்கா" என்று நர்ஸிடம் கொஞ்சியது, அர்ச்சனா.

"உன்னால் தள்ள முடியாதும்மா.."

"முடியும் அக்கா.. ப்ளீஸ்.."

"விடுங்கள், சிஸ்டர்.. ஆசைக்கு கொஞ்சம் தூரம் தள்ளிக்கொண்டு வரட்டும். முடியவில்லையென்றால் எப்படியும் உங்களிடம்தான் கொடுக்கப் போகிறது.."

நர்ஸ் நகர்ந்துகொள்ள, சக்கர நாற்காலியின் வளைந்த கைப்பிடிகளைப் பிடித்து அர்ச்சனா தள்ள ஆரம்பித்தது.

யாரும் கவலைப்பட்டிருக்கத் தேவையே இல்லை.

அர்ச்சனா ஆயாசமில்லாமல் சுலபமாக நாற்காலியை நகர்த்திக்கொண்டு போனது.

"அர்ச்சனா.. இன்னும் நீ பூஸ்ட் சாப்பிடவில்லை" என்று நினைவூட்டினாள் டைனிங் ஹாலில் நின்றிருந்த பாரதி. பாரதி கண்களை மறைத்து கறுப்பு கண்ணாடி அணிந்திருந்தாள்.

"கமான், டியர்.. போ.. போய் சாப்பிட்டுவிட்டு வா.." என்று செல்லமாகத் தள்ளிவிட்டான், ராஜேஷ்.

நர்ஸ் நாற்காலிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள்.

மதுரையிலிருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்டு சிகிச்சைகள் முடிந்து வீட்டுக்கு வந்து நான்கு நாட்கள்தான் ஆகின்றன.

பாரதியின் கண்ணில் ஆழமாக ஏற்பட்டுள்ள காயம் குணமான

பின்தான் பார்வையை மீட்கும் முயற்சி எதையும் மேற்கொள்ள முடியும் என்று ஐ ஸ்பெஷலிஸ்ட் சொல்லிவிட்டார்.

ராஜேஷ் கம்பெனியின் கிளை மேலாளராக பதவி உயர்வு பெற்றதாகக் கடிதம் வந்திருந்தது. அவனுடைய கால் துண்டிக்கப்பட்டுவிட்டதால், பதவியில் இருப்பதா அல்லது அது அசௌகரியமா என்று அவன்தான் முடிவு செய்ய வேண்டும் என்று மீட்டிங்கிற்கு அவனைக் கூப்பிட்டிருந்தார்கள்.

அதற்குத்தான் போய்விட்டு வந்திருந்தான்.

அர்ச்சனா பூஸ்ட் சாப்பிட்டுவிட்டு தோட்டத்துக்கு ஓடிவிட்டது.

"ராஜேஷ்.. இன்றைக்கு தேதி பதினெட்டு.. போன மாதம் இதே பதினெட்டுதான் கொடைக்கானலில் நம் காரே கவிழ்ந்தது.. எனக்கென்னவோ பயமாயிருக்கிறது.." என்றாள் பாரதி, அவன் தோள்களைப் பற்றி.

"பயப்பட எதுவும் இல்லை, பாரதி. அபிராமி செத்துப் போனது பதினெட்டாம் தேதிதான். அதனால்தான் போன பதினெட்டு குழந்தையை தத்து எடுத்தோம்.."

"அர்ச்சனாவும் சற்று கிறுக்குத்தனமாக நடந்துகொண்டதாக டாக்டர்கள் சொன்னார்களே?"

"சொன்னார்கள். ஆனால் ஒரு மாதமாய் எந்த பிராப்ளமும் இல்லையே.. அது தன் பாட்டுக்கு ஒழுங்காகத்தானே இருக்கிறது?"

"சொல்லத் தெரியவில்லை.. ஆனால் அடிவயிற்றில் ஒரு கலக்கம் இருக்கிறது, ராஜேஷ்.."

"ஒன்றும் கவலைப்படாதே.." என்றான் ராஜேஷ். நர்ஸைப் பார்த்துத் திரும்பினான். " சிஸ்டர், இன்றைக்கு நைட் லீவு வேண்டும் என்று கேட்டீர்களே?"

"ஆமாம், சார்.. ஊரிலிருந்து என் அப்பா வந்திருக்கிறார்" என்று குழைந்தாள், நர்ஸ்.

"தட்ஸ் ஆல்ரைட்... நீங்கள் போங்கள்.. நாங்கள் சமாளித்துக்கொள்வோம்.." என்றான், ராஜேஷ்.

"தேங்க்யூ சார்.. வருகிறேன், மேடம்" என்று அவளிடமும் சொல்லிக்கொண்டு நர்ஸ் புறப்பட்டாள்.

தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்த அர்ச்சனா சற்று நேரத்தில் மூச்சிரைக்க வீட்டுக்குள் வந்தாள்.

"அர்ச்சனா – பாத்ரூமில் போய் கை கால்களைக் கழுவிக்கொண்டு வா" என்றாள், பாரதி.

அர்ச்சனா பாத்ரூமுக்கு ஓடினாள்.

"ஆன்ட்டி, இன்றைக்கு நான் மாடிக்குப் போகலாமா?"

"நோ..!" என்று பதறினாள், பாரதி. "உனக்கு ஏற்கெனவே பல

தடவை சொல்லியிருக்கிறேன் – மாடிக்கு மட்டும் போகவே கூடாது"

"ஏன் ஆன்ட்டி?"

"அங்கே அங்கே.." அதற்கு மேல் சொல்ல முடியாமல் பாரதியின் உடம்பு நடுங்கியது. கண்ணிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்து கன்னத்தில் இறங்கியது. கறுப்புக் கண்ணாடியை எடுத்துவிட்டு புடவைத் துணியால் ஒற்றிக்கொண்டாள்.

***

இரண்டு மாதங்களுக்கு முன்பு பதினெட்டாம் தேதி பார்ட்டியிலிருந்து திரும்பி வந்த மழை இரவு நினைவில் சிலிர்ப்பாக ஓடியது.

இருட்டு. எங்கும் இருட்டு. வீட்டின் படிகளில் எல்லாம் மழைத் தண்ணீர். டார்ச் வெளிச்சத்தில் அந்த ஈரத்தில் படிகள் ஏறி, ராஜேஷின் ரூமில் அவர்கள் பார்த்த அந்தக் கொடூரக் காட்சி..!

நினைத்தாலேயே உடல் நடுங்கியது.

அபிராமியை அன்றைக்கு தனியாக விட்டுப்போனது பற்றி யார் முதலில் பேசினாலும் அடுத்தவரால் குதறப்படும் தர்மசங்கடமான அபாயம் இருந்தது.

அன்றிலிருந்து மாடிக்குப் போகும் பாதையை மறித்து ஒரு குறுக்குக் கம்பி மாட்டிவிட்டார்கள். மிக அத்தியாவசியம் என்று வந்தாலொழிய மாடிக்கே போகாமல் சமாளிக்கும் பக்குவத்தை வளர்த்துக்கொண்டிருந்தார்கள்.

"ஆன்ட்டி எனக்குத் தூக்கம் வருகிறது.."

"சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு படுக்கலாம், கண்ணம்மா.." என்றாள், பாரதி.

"ஒரே ஒரு தடவை நான் மாடிக்குப் போகலாமா, ஆன்ட்டி?"

"நோ.." இந்த முறை பாரதியின் குரல் மிரட்டலாக வந்தது.

அர்ச்சனா முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு டைனிங் நாற்காலியில் உட்கார்ந்தது.

6

பெட்ரூமில் ஒரே ஒரு நீல விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தான் ராஜேஷ்.

தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்து வேதனையில் தவித்துக்கொண்டிருந்தது மனம்.

சற்றுத் தள்ளிப் படுத்திருந்த பாரதியின் கையைப் பற்றி அவன் அழுத்திக் கொடுத்தான். அவளிடமிருந்து ஒரு மெல்லிய விம்மல் விண்டு வந்தது.

"பாரதி" – அவளிடமிருந்து பதில் ஏதும் இல்லை.

"அபிராமியின் ஞாபகம் வந்துவிட்டது எனக்கு" என்றான், ராஜேஷ்.

"நானும் அதையேதான் நினைத்துக்கொண்டிருந்தேன்.. பேசாமல் இந்த வீட்டைவிட்டு வேறு வீட்டுக்குப் போய்விடலாமா, ராஜேஷ்? இந்த வீட்டில் இருந்தால் எனக்கு அவள் ஞாபகம் துரத்திக்கொண்டுதானிருக்கும்.."

"இந்த வீட்டைக் கட்டுவதற்கு ஐந்து வருஷம் ஓயாமல் கஷ்டப்பட்டிருக்கிறோம், பாரதி.."

"உண்மைதான்.. ஒவ்வொரு செங்கல்லும், ஒவ்வொரு ஸ்விட்சும்கூட பார்த்துப் பார்த்து வாங்கியதுதான். ஆனால் இந்த வீட்டில் இனிமேல் நமக்கு சந்தோஷம் இருக்குமா, ராஜேஷ்? வீட்டுக்குள் நுழையும்போது ஒவ்வொரு தடவையும் அபிராமியின் நினைவு வந்து – ராஜேஷ்..!" பதறினாள் பாரதி.

"என்ன?"

"அர்ச்சனா எங்கே?"

"இங்கேதானே படுத்திருந்தாள்?"

"ஐயையோ, நம்மை ஏமாற்றிவிட்டு இறங்கியிருக்கிறாள்.. அவள் படுத்திருக்க வேண்டிய இடத்தில் தலையணைதான் இருக்கிறது.."

சட்டென்று ராஜேஷ் படுக்கையறையின் விளக்கைப் போட்டான்.

ஒரு தலையணை குறுக்கில் வைத்து போர்த்தப்பட்டிருந்தது, அர்ச்சனாவின் கட்டிலில்.

"அர்ச்சனா.. அர்ச்சனா.."

பாத்ரூம் கதவு திறந்து தேடினார்கள். இல்லை.

"அர்ச்சனா.."

"ஷ்." என்று உதடுகளில் விரல் வைத்துத் தடுத்தான் ராஜேஷ். "மாடியில் யாரோ நடமாடும் சத்தம் கேட்கவில்லை?"

"ஐயையோ.. அர்ச்சனா மாடிக்குப் போக வேண்டும் என்று சொல்லியது, போகாதே என்று எச்சரிக்கை செய்திருந்தேனே.. அதையும் மீறிக்கொண்டு போய்விட்டதா?"

இருவரும் ஹாலுக்குள் வந்தார்கள்.

மாடியில் இப்போது தெளிவாக சத்தம் கேட்டது. இரண்டு பாதங்கள் நடக்கும் ஒலி. அர்ச்சனாவின் கால்களில் போட்டிருந்த கொலுசு ஒவ்வொரு அடிக்கும் ஏற்படுத்தும் கிணிங் கிணிங் என்ற சத்தம்.

"அர்ச்சனா.."

பாரதி குரல் கொடுத்தாள்.

பதில் இல்லை.

"அர்ச்சனா.." ராஜேஷ் பதறிக் கூப்பிட்டான்.

பதில் இல்லை.

தோட்டத்து மரம் ஜன்னலை உடைத்துவிட்டதால் மழைத் தண்ணீர் உள்ளே வந்துவிடுகிறதே என்று மாடியில் தற்காலிகமாக முழுக் கண்ணாடிக் கதவு ஒன்றைப் போட்டிருந்தார்களே தவிர, அதற்கு குறுக்கில் கம்பிகள் வைக்கவில்லை என்ற நினைவு வந்தது.

திடீரென்று ஜன்னல்கள் படபடவென்று அடித்துக்கொண்டன. எங்கிருந்தோ நாய் ஒன்று ஓயாமல் ஊளையிட ஆரம்பித்தது. மாடியில் சிலீர் என்று கண்ணாடி உடையும் சத்தம்.

"அர்ச்சனா.. அர்ச்சனா.. வந்துவிடும்மா.." பாரதி கெஞ்சினாள்.

"நீ மேலே வாம்மா.."

திடுக்கிட்டார்கள்.

அது அர்ச்சனாவின் குரல் இல்லை. அபிராமியின் குரல்.

"என்னங்க. அபிராமி கூப்பிடுகிறது.."

"போகாதே பாரதி.. எனக்கு பயமாயிருக்கிறது.. அன்றைக்கு காரில் இந்த குரல் கேட்டுத்தான் விபத்தே நடந்தது..."

ராஜேஷ் அவள் கையைப் பிடித்துத் தடுத்தான்.

"அம்மா.. எனக்கு தனியாக இருக்க பயமாயிருக்கிறது.. மேலே வாம்மா.." –

அபிராமியின் குரல் மீண்டும் மாடியிலிருந்து ஒலித்தது.

பாரதி குறுக்குக் கம்பியை நகர்த்திவிட்டு படியேற முனைந்தாள்.

"வேண்டாம் பாரதி.." – ராஜேஷ் தடுத்தான்.

பாரதிக்கு உடம்பு நடுங்கியது. கண்களில் கண்ணீர் ததும்பியது. இரண்டு மாதங்களாக குற்ற உணர்ச்சியில் வெதும்பிக்கொண்டிருந்த இதயம், அபிராமியின் குரல் கேட்டதும் மாடிக்கு விரைந்து போக விழைந்தது. ஆனாலும் உணர்ச்சிகளை மீறிய பய உணர்வு அவள் கால்களைக் கட்டிப் போட்டது.

மேலே கட்டில் நகர்த்தப்படும் ஒலி. க்ரீய்ச் என்று.

"அர்ச்சனா..!" பாரதி மீண்டும் குரல் கொடுத்தாள். திடீரென்று விளக்குகள் எல்லாம் ஒரு முறை மினுக்கிவிட்டு அணைந்தன.

"கரண்ட் கட்.." என்றாள் பாரதி, ராஜேஷின் கையை ஆதரவாகப் பற்றிக்கொண்டு.

"ஆன்ட்டி.. ஆன்ட்டி.. எனக்கு பயமாக இருக்கிறது. யாராவது வந்து என்னை கீழே கூட்டிப் போங்களேன்.."

இந்த முறை மாடியிலிருந்து அர்ச்சனாவின் குரல் கேட்டது. அதன் பிஞ்சுக் கால்கள் இங்கும் அங்கும் பயத்தில் ஓடும் ஒலி. தொப்பென்று கதவு மீது அர்ச்சனா மோதிக்கொள்ளும் சத்தம்.

"நான் போகிறேன்.. டார்ச்சை எடு" என்றான், ராஜேஷ்.

"வேண்டாம், ராஜேஷ். இருட்டில் ஒற்றைக் காலை வைத்துக்கொண்டு மாடிப்படி நீங்கள் ஏற வேண்டாம்.. நான் போகிறேன்.."

பாரதி அலமாரியில் தடவி டார்ச்சை எடுத்தாள்.

"விடு.. ஐயோ என்னை விடு.. ஆன்ட்டி.." என்று மாடியிலிருந்து அர்ச்சனாவின் போராடும் குரல்.

"இதோ வந்துவிட்டேன், கண்ணம்மா.."

பாரதி டார்ச்சை ஆன் செய்து அந்த வெளிச்சத்தில் படிகளில் வேகமாக ஏறினாள். ராஜேஷ் கீழே ஒற்றைக் காலில் நின்று மாடிப்படி கைப்பிடியை ஆதரவாகப் பற்றிக்கொண்டு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

பாரதி மேல் படியை அடைந்ததும், பட்டென்று டார்ச் விளக்கு அணைந்தது. பாரதிக்கு திடுக் என்றிருந்தது. டார்ச்சை உதறினாள். எரியவில்லை.

"பாரதி" – பதட்டத்துடன் கீழேயிருந்து குரல் கொடுத்தான், ராஜேஷ். "அங்கேயே இரு இன்னொரு டார்ச் எடுத்து வருகிறேன்."

அவன் சுவரைப் பிடித்து நொண்டி நொண்டி அலமாரியை நெருங்கினான்.

"வேண்டாம்.. நீங்கள் வரவேண்டாம்.. அங்கிருந்தே வெளிச்சம் காட்டுங்கள், போதும்.."

ராஜேஷ் அலமாரியிலிருந்து இன்னொரு டார்ச் எடுத்து – எடுத்தபோதே ஏமாற்றமாயிருந்தது. டார்ச்சில் பாரமில்லை. அப்படியானால் அதில் பேட்டரிகள் இல்லை.

"பாரதி.. ஸ்பேர் பேட்டரிகள் இருக்கிறதா?"

"இல்லை.. பரவாயில்லை. நான் சமாளித்துக்கொள்கிறேன்.." பாரதி சுவரைப் பிடித்துக்கொண்டு நகர்ந்தாள்.

"அர்ச்சனா..!" என்று குரல் கொடுத்தாள்.

பதில் இல்லை.

"அர்ச்சனா.."

"ம்ம்க்.. ம்ம்க்.. ம்ம்க்" என்று முனகல் ஒலி உள்ளறையிலிருந்து வந்தது.

பாரதி அந்த அறையின் கதவைத் திறந்தாள்.

இருட்டுக்கு அவள் பார்வை பழகியிருந்தது. ஜன்னல் வழியே வெளியில் எங்கிருந்தோ வந்த வெளிச்சம் கசிந்திருந்தது. அந்த மசமசப்பான ஒளியின் பின்னணியில் அந்த அறையில் பொருட்கள் ஸில்அவுட் விளிம்புகளாகத் தெரிந்தன. கட்டில், மேஜை, ஸ்டூல், நாற்காலி, நாற்காலிக்குக் கீழே-

அர்ச்சனா குப்புறடித்துக் கிடந்தாள்.

"அர்ச்சனா.."

அவளிடமிருந்து மீண்டும் முனகல்.

பாரதியின் கால்கள் பின்னின. அந்த இருட்டு அறைக்குள் பிரவேசிக்க உடம்பு நடுங்கியது. ஆனால் அபிராமியை இழந்தது போல் அர்ச்சனாவையும் இழக்க வேண்டுமா?

அவள் தைரியத்தை வரவழைத்து அறைக்குள் மெல்லக் காலடிஎடுத்து வைத்தாள். அவள் உள்ளே நுழைந்ததும் கதவு சட்டென்று அறைந்து சாத்திக்கொண்டது. திடுக் என்று அவள் இதயம் ஒரு கணம் நின்று போனது. காற்றில் சாத்திக்கொண்டிருக்கும்.

இதயத்தின் லப்-டப் அவளுக்குத் துல்லியமாய் கேட்டது. நெஞ்சின் படபடப்பு ஓரங்களில் சூடாகியிருந்தது. பாதங்களை நோகாமல் எடுத்து வைத்து அர்ச்சனாவை நெருங்கிக் குனிந்தாள். மண்டியிட்டு அமர்ந்தாள்.

"அர்ச்சனா.." என்று அவள் தலையைத் தொட்டாள்.

அர்ச்சனா ஸ்ப்ரிங் போலத் துள்ளி எழுந்தாள். அதை சற்றும் எதிர்பார்க்காத பாரதி திடுக்கிட்டு வீல் என்று அலறினாள். அர்ச்சனா பாரதியின் மீது பாய்ந்தாள். பாரதி பயத்தின் காரணமாக என்ன செய்கிறோம் என்பது புரியாமல் கையை வீசி அர்ச்சனாவைத் தடுக்க முயற்சிக்க, அந்தக் கையை அர்ச்சனா வெடுக்கென்று கடித்தாள்.

"ஐயோ..!" என்று பாரதி அலறினாள். கதவை நோக்கிப் புரண்டு ஓடினாள். தன் மீது பாய்கிற வேட்டை நாயைத் தடுப்பது போல காலாலும், கையாலும் அர்ச்சனாவை உதைத்து விலக்கிக்கொண்டே ரும் கதவைத் திறந்து வெளியே பாய்ந்தாள்.

"பாரதி.. பாரதி.." என்று கீழேயிருந்து ராஜேஷ் பதறிக்கொண்டிருந்தான். அவளுடைய குரலைக் கேட்டுக் காப்பாற்றும் எண்ணத்துடன் படிகளில் ஏற ஆரம்பித்து இரண்டாவது படியில் அவன் இருந்தபோது-

தப்பித்து ஓடி வரும் பதைப்பில் மாடிப்படிகளில் கவனம் இல்லாமல் காலை பாரதி வைக்க, கால் பிசகி, படிகளில் உருண்டு எகிறி அவன் மீது பாரதி விழுந்து மோதி, இருவருமாக ஹாலில் சேகரமானார்கள்.

ராஜேஷ் தன்னை விடுவித்துக்கொண்டான். பாரதியின் தலையைத் தொட்டுத் தூக்க முற்பட்டான்.

தலை ஈரமாய் இருந்தது.

கசகசப்பான அடர்த்தியான ஈரம்.

பாரதியின் ரத்தம்.

ராஜேஷ் தரையிலேயே நகர்ந்து, சுவர் பிடித்து எழுந்து, ஒற்றைக் காலால் நடந்து பூஜையறையில் இருந்த தீப்பெட்டி எடுத்து விளக்கேற்றினான். அந்த வெளிச்சம் ஹாலில் பரவியபோது சட்டென்று மின்சாரம் திரும்பி வந்தது. அத்தனை விளக்குகளும் எரிந்தன.

வெளிச்சத்தில் பாரதியின் மார்புகள் ஹே ஹே என்று பொங்கிப் பொங்கி மூச்சுக்குத் தவித்துக்கொண்டிருந்தன.

ராஜேஷ் டெலிபோனிற்கு விரைந்து நகர்ந்தான்.

டாக்டருக்கு போன் செய்துவிட்டுத் திரும்பியபோதுதான் கவனித்தான்-

படிகளில் நடுவில் குப்புறடித்துக் கிடந்தாள் – அர்ச்சனா.

நர்ஸை இன்றைக்கு வீட்டுக்கு அனுப்பியிருக்கக் கூடாதோ? இன்னொருத்தர் உதவியில்லாமல் எதுவும் செய்ய இயலும் என்று தோன்றவில்லை. இப்போது யாரை முதலில் கவனிப்பது? பாரதியையா, அர்ச்சனாவையா?

ஃப்ரிட்ஜிலிருந்து ஐஸ்கட்டி எடுத்து துணியில் சுற்றி பாரதியின் ரத்தக் காயத்தில் வைத்து அழுத்தினான்.

கார் ஒன்று வந்து வாசலில் நிற்கும் ஒலி கேட்டது.

தடுமாறி எழுந்தான். விழுந்தான். சுவரைப் பிடித்து மறுபடி எழுந்தான். தொடையும், இடுப்பெலும்பும் வலிக்க வலிக்க வாசல் கதவை நெருங்கித் திறந்தான்.

டாக்டர்,

7

முந்தின இரவின் ஆர்ப்பாட்டங்கள் எதுவும் மிச்சமில்லாதது போன்ற அமைதியான பகல் நேரம்.

பாரதி கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள்.

டாக்டர் வந்து கவனித்து தலையில் மிகச் சிறிய வெட்டு என்று மூன்று தையல்கள் போட்டுவிட்டு, அதிர்ச்சியின் மயக்கம் தெளிய மருந்துகள் கொடுத்துவிட்டுப் போனதெல்லாம் கனவு போல் நினைவிருந்தது.

கட்டிலின் இன்னொரு பகுதியில் பொம்மை போல் அர்ச்சனா படுத்திருந்தது. அர்ச்சனாவிற்கு கால் கட்டை விரல் நகம் மட்டும் பெயர்ந்திருந்தது. அதற்கு மருந்து வைத்து கட்டுப் போடப்பட்டிருந்தது.

அர்ச்சனாவைப் பார்க்கும்போதே பாரதிக்குள் ஒரு மின்னல் நடுக்கம் ஓடியது.

"அர்ச்சனா.. இந்த மருந்தைக் குடித்துவிட்டு தூங்கும்மா.." என்று ராஜேஷ் அர்ச்சனாவின் அருகில் உட்கார்ந்து எழுப்பினான்.

அர்ச்சனா மெல்லக் கண் திறந்தது.

"அன்க்கிள்.. ஸாரி அன்க்கிள்.."

"எதற்கு ஸாரி?"

"மாடிக்குப் போகக் கூடாது என்று ஆன்ட்டி சொல்லியிருந்தார்கள்.. ஆனாலும் எனக்குப் போக வேண்டும் என்று ரொம்ப ஆசையாக இருந்தது. அதனால் ராத்திரி உங்களை ஏமாற்றிவிட்டுப் போனேன்.. என்னைத் தேடிக்கொண்டு வந்ததால்தானே ஆன்ட்டி கண் தெரியாமல் படியில் விழுந்துவிட்டார்கள்..."

கண் தெரியாமல்.

அப்படியானால் அவளைத் துரத்திய ஞாபகம்கூட அர்ச்சனாவிடம் இல்லையா?

"அர்ச்சனா.." பாரதி தயக்கத்துடன் கூப்பிட்டாள். "நீ மாடிக்குப் போனாயே, அப்புறம் என்ன ஆயிற்று?"

"மாடிக்குப் போனேனா? விளக்கைப் போட்டால் நீங்கள் இருவரும் விழித்துக்கொண்டு என்னைத் திட்டுவீர்கள் என்று விளக்கைப் போடாமலேயே இருட்டில் போனேன். ரூம் சாத்தியிருந்தது. கதவைத் திறந்தேன். உள்ளே சூடாக இருந்தது. உள்ளே யாரோ நாற்காலியை நகர்த்திவிட்டு எழுந்திருக்கும் சத்தம் கேட்டது. ஒருவேளை நர்ஸ்தான் அங்கே உட்கார்ந்திருக்கிறாளோ என்று அக்கா.. அக்கா என்று கூப்பிட்டுப் பார்த்தேன். பதிலே இல்லை. அந்த ரூமுக்குள் போனதும் எனக்குத் தூக்கமாக வந்தது. கட்டிலில் ஏறிப் படுத்தேன். அவ்வளவுதான் ஞாபகம் இருக்கிறது. அப்புறம் கண் திறந்து பார்த்தபோது, டாக்டர் என் காலுக்கு மருந்து

போட்டுக்கொண்டிருந்தார். அப்புறம் மறுபடி தூங்கிவிட்டேன்.."

"அவ்வளவுதானா? நீ மாடியிலிருந்து 'விடு..! விடு..!' என்று கத்தினாயே?" என்றாள் பாரதி.

"நானா? கத்தினேனா? இல்லையே ஆன்ட்டி?"

"பாரதி.. குழந்தையிடம் எதுவும் கேட்காதே.."

"எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது. இந்த வீடு வேண்டாம்.. இங்கே அபிராமி சுற்றிக்கொண்டிருக்கிறாள்.. என்னையும் உங்களையும் கொல்லாமல் அவள் விடமாட்டாள்.."

"பாரதி."

"ப்ளீஸ்.. ஏற்கெனவே கிட்டத்தட்ட செத்துப் பிழைத்தோம் அந்த ஆக்ஸிடெண்ட்டில். மறுபடி உயிரைப் பணயம் வைக்க வேண்டுமா. யோசியுங்கள்.. இந்த வீட்டை விற்றுவிடுவோம்.."

"சரி.. பேப்பரில் விளம்பரம் கொடுக்க இன்றைக்கே ஏற்பாடு செய்கிறேன்.."

"அது மட்டும் போதாது.. யாராவது மந்திரம் தெரிந்தவர்களைக் கூப்பிட்டு, வீட்டில் கெட்ட ஆவி இருந்தால் ஓட்டச் சொல்ல வேண்டும்.."

"இன்றைக்கே கோயில் குருக்களைப் போய்ப் பார்க்கிறேன், பாரதி" என்றான் ராஜேஷ்.

அர்ச்சனாவையும் திருப்பி விடுதியிலேயே கொண்டுவிட்டுவிடலாம் என்று சொல்ல வேண்டும்போல, பாரதிக்கு எண்ணம் எழுந்தது. ஆனால் குழந்தையையும் வைத்துக்கொண்டு அப்படிப் பேசுவது நியாயமில்லை என்று தோன்றியதால் தன் நாக்கை தானே அடக்கிக்கொண்டாள்.

"ஐ' ம் டெர்ரிப்லி ஸாரி.." என்று மன்னிப்பு கேட்டுக்கொண்டே நர்ஸ் வந்து சேர்ந்தாள். " நேற்று நான் உங்களைத் தனியே விட்டுப்போனதால் இங்கே நிறைய பிராப்ளம் என்று கேள்விப்பட்டேன்.. ரொம்ப ஸாரி.."

"நீங்கள் என்ன செய்வீர்கள், சிஸ்டர்? தட்ஸ் ஆல் ரைட்" என்றான் ராஜேஷ், புன்னகையை வலிய வரவழைத்து.

***

சிறிய வீடு.

சிகப்பு ஓடுகள் நான்கு பக்கமும் சரிந்து இறங்கியிருந்தன. உயரமான வாசல் கதவின் மர நிலைக்குக் குறுக்கே தோரணம் கட்டி மாவிலைகள் காற்றில் ஊஞ்சலாடின. வட்டமான செப்புத் தகடு ஒன்று வாசலுக்கு மேலே பொருத்தப்பட்டிருந்தது.

டிரைவரின் உதவியுடன் வாசல் வரை வந்துவிட்ட ராஜேஷ் தன் இரு ஊன்றுகோல்களின் உதவியுடன் அந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தான்.

நுழைந்ததும் இருந்தது ஹால். சிமெண்ட் தரையில் அங்கங்கே சிறு சிறு பள்ளங்கள், எலுமிச்சைப் பழச்சாறு விட்டுவைத்த கறைகள், கும்மென்று வாசனைப் புகையால் நிறைந்திருந்தது ஹால். சுவரெங்கும் வெவ்வேறு விதமான கடவுள் படங்கள். ஆஞ்சநேயருக்கும், காளிக்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது. படங்களில் எல்லாவற்றிற்கும் சந்தனமும், குங்குமமும் அப்பியிருந்தன. புதிய பூச்சரங்கள் போடப்பட்டிருந்தன. அறை மூலையில் சுவர்கள் சேரும் இடத்தில் குங்குமம் சிதறியிருந்தது. எலுமிச்சைப் பழங்கள் மஞ்சள் பந்துகளாகத் திறந்திருந்தன. பித்தளை தீபம் ஒன்றில் தடிமனான திரி சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்தது.

ஒரு மணைப் பலைகையில் உட்கார்ந்திருந்தவர் கண்களை மூடியிருந்தார். மஞ்சள் வேட்டி, இடுப்பில் மஞ்சள் வேட்டியை நிறுத்தும் மஞ்சள் துண்டு. கழுத்தில் கறுப்பு ருத்ராட்சம். திறந்த மார்பில் சந்தனக் கீற்றுகள்.

ராஜேஷ் எதிர்பார்த்ததைவிட, யோகி தேவிதாசன் இளமையாக இருந்தார். முப்பத்தைந்து வயதுக்கு மேல் இராது.

தேவிதாசன் ஊன்றுகோல்களின் ஒலியால் பாதிக்கப்படாதவர்போல இன்னும் சற்று நேரம் கண்களை மூடியே இருந்துவிட்டு சட்டென்று திறந்தார்.

பெரிய விழிகள். சிவந்திருந்தன. பார்வையில் கருணையைவிட கோபமும், ருத்ரமும் அதிகம் தெரிந்தன.

"உட்கார்.." என்று நாற்காலியைக் காட்டினார்.

அவர் தரையில் உட்கார, தான் நாற்காலியில் உட்கார்வதா என்ற கூச்சத்துடன் சற்று நேரம் ராஜேஷ் தயங்க, "பரவாயில்லை, உட்கார்.." என்றார்.

ராஜேஷ் நாற்காலியில் உட்கார்ந்தான்.

"என்ன வேண்டும்?"

"கோயிலில் விசாரித்தபோது உங்களைப் பற்றிச் சொன்னார்கள். தீய சக்திகளை ஒடுக்கும் யோகி என்று சொன்னார்கள். அதனால்தான் தேடிவந்தேன்.."

"என்ன விஷயம், சொல்.." என்று தேவிதாசன் கண்களை மூடிக்கொண்டார். அவன் சொல்வதை முழு கவனத்துடன் கேட்க வேண்டும் என்பதற்காக, கவனத்தை சிதறடிக்காத முயற்சியாக கண்களை மூடிக்கொண்டிருக்கிறார் என்று தோன்றியது.

"இரண்டு மாதங்களுக்கு முன் நானும், என் மனைவியும் ஒரு பார்ட்டியில் கலந்துகொண்டோம். அந்த சமயம் எங்கள் ஏழு வயது மகள் அபிராமியை வீட்டில் தனியே விட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு

போய்விட்டோம். அன்றைக்கு மழையும், புயலும் வலுத்து மின்சாரம்கூட கட் ஆகிவிட்டது. அபிராமி பயந்திருக்க வேண்டும். என் அறையில் டார்ச் லைட் எடுத்து வர நுழைந்திருக்கிறாள் போலிருக்கிறது. காற்றில் மரக் கிளை முறிந்து ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே பாய்ந்து அவளைத் தரையுடன் நசுக்கிவிட்டது.

"நாங்கள் திரும்பி வந்தபோது அபிராமி உயிருடன் இல்லை. அழுதோம். கதறினோம். குற்ற உணர்ச்சியால் தவித்தோம். அபிராமியை மறுபடியும் தனியே சுடுகாட்டில் எரிக்க வேண்டாம், இருக்கும் வரை நம்முடனேயே இருக்கட்டும் என்றாள் என் மனைவி. அபிராமிக்கு ஒரு அலங்காரமான சவப்பெட்டி தயார் செய்தோம். எங்கள் வீட்டுத் தோட்டத்திலேயே புதைத்தோம்.

"அபிராமியின் வயதில் இருக்கும் ஒரு குழந்தையை தத்து எடுத்து அபிராமிக்குக் காட்ட மறந்த அன்பைக் காட்டி அதை வளர்க்க வேண்டும் என்று கொடைக்கானல் அநாதை விடுதி ஒன்றிலிருந்து அர்ச்சனா என்ற ஏழு வயதுப் பெண்ணை அழைத்துக்கொண்டோம். காரில் திரும்பிக்கொண்டிருந்தபோது, செத்துப்போன அபிராமியின் குரல் கேட்டது. அது, தானே காரை ஓட்ட வேண்டும் என்று கேட்டது. நான் ஸ்டியரிங்கிலிருந்து கை எடுக்க, கார் மலை முகட்டிலிருந்து கீழே புரண்டு – என் வலது கால் போயிற்று. என் மனைவிக்கு இடது கண் போயிற்று. அர்ச்சனா கோமாவில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதற்கு உயிர் வந்து ஆஸ்பத்திரியிலேயே கொஞ்சம் ரகளை செய்தது.

"அப்புறம் இங்கே மெட்ராஸிற்கு எங்களுடன் கூட்டி வந்துவிட்டோம்.. நேற்றைக்கு என்ன நடந்தது என்றால்.."

கண்களைத் திறக்காமல் யோகி தேவிதாசன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார்.

"அபிராமியின் குரல் உங்களுக்கு மட்டும் கேட்டதா; உங்கள் மனைவிக்கும் கேட்டதா..?"

தேவிதாசனின் குரல் கோயில் மணிபோல் ரீங்கரித்தது.

"காரில் வந்தபோது எனக்கு மட்டும் கேட்டது. நேற்று வீட்டில் எங்கள் இருவருக்குமே கேட்டது.."

"சந்தேகமில்லை.. அது அபிராமியின் ஆவி தான். உங்கள் இருவர் உயிரையும் குடிக்காமல் அது விலகாது.. ஆஸ்பத்திரியில் கோமாவில் கிட்டத்தட்ட இறந்துபோன நிலையில் இருந்த அர்ச்சனாவின் உடம்பிற்குள் அபிராமியின் ஆவி புகுந்துவிட்டது"

ராஜேஷ், தேவிதாசனின் கணீரென்ற வார்த்தைகளை, பிரமை பிடித்தவன் போலக் கேட்டுக்கொண்டிருந்தான்.

“அபிராமியின் உடலை முதலில் உங்கள் தோட்டத்திலிருந்து எடுக்க வேண்டும். எடுத்து எரித்துவிட வேண்டும். எலும்புகளைத் தவிர மற்ற எல்லாம் சாம்பலான பிறகுதான் அபிராமி ஒழியும். அதுவரை அடிக்கடி வந்து உங்களைத் தொந்தரவு செய்துகொண்டுதானிருக்கும்..”

“பதினெட்டாம் தேதியன்றுதான் அர்ச்சனா அப்படி பேச்சு கேட்காமல் மாடியேறிப் போனாளே தவிர அதற்கு முன்னால் அவள் நார்மலாகத்தான் இருந்தாள்..”

“இருந்திருக்கலாம்.. ஆனால் இனி அர்ச்சனாவாலும் ஆபத்துதான். மதுரை ஆஸ்பத்திரியில் அர்ச்சனாவின் உடலில் புகுந்திருக்கலாம். ஆனால் அபிராமி, தான் உயிர் இழந்த அதே அறைக்குள் அர்ச்சனாவை வரவழைத்த பிறகுதான் முற்றிலும் அவள் உடலை ஆக்கிரமித்திருக்க முடியும். இனிமேல் அவள் போக்கில் வித்தியாசங்கள் தெரியலாம்.. நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்..”

“அந்த ஆவியைத் துரத்த என்ன செய்ய வேண்டுமோ, செய்யுங்கள்.. எத்தனை செலவானாலும் பரவாயில்லை..”

“பணம் மட்டுமே எல்லாக் காரியங்களையும் சாதித்துவிடாது. மகனே.. அபிராமி இறந்த ரூமுக்கு அர்ச்சனா போகாமல் இருந்திருந்தால் என் வேலை சுலபமாக இருந்திருக்கும்.. வாடகை வீட்டில் குடியேறுவது போல் குடியேறிவிட்டது அபிராமியின் ஆவி. அதைத் துரத்துவதற்கு நான் முப்பத்தியாறு நாட்கள் பூஜை செய்ய வேண்டும். முப்பத்தியாறாவது நாள் அவளை இங்கே அழைத்து வர வேண்டும். இங்கு வைத்துத்தான் அந்த ஆவியை விரட்ட முடியும்.”

“அதுவரை அர்ச்சனாவை எங்களுடன் தங்க வைத்துக்கொள்ளலாமா? அவளால் எந்த ஆபத்தும் வராதா?”

“ஆபத்து வரலாம்., அதற்கு எதிர்ப்பாக நான் பூஜையில் இருந்து இரண்டு எலுமிச்சம் பழங்கள் எடுத்துத் தருகிறேன்.. அவற்றை நீயும் உன் மனைவியும் எப்போதும் வைத்திருங்கள்.. ஆவி உங்களை நெருங்காது. அர்ச்சனாவின் தலையிலிருந்து இரண்டு முடிகளும், அபிராமியின் தலையிலிருந்து இரண்டு முடிகளும் எடுத்துக்கொண்டுவிட்டு, நாளைக்கு உடலை எரித்து விடு.. உங்கள் தோட்டத்திலேயே எரித்து விடு.. ஆனால் எரிய ஆரம்பித்த பிறகு பாதியில் நெருப்பு அணையக் கூடாது.. முற்றிலும் சாம்பலாகிற வரை நெருப்பு அணையக் கூடாது”

தேவிதாசன் கண்களை மூடியபடி குவிந்திருந்த எலுமிச்சைகளில் இரண்டை எடுத்து அவன் கையில் தப் தப் என்று போட்டார்.

“பயப்படாதே, தேவி துணையிருப்பாள்..” என்று அவர் கணீர் என்று சொன்னபோது, ராஜேஷின் மனம் லேசாகிப்போனது. எலுமிச்சைகளைப் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, அவரை

நமஸ்கரித்துவிட்டு காருக்கு நடந்தான்.

டொக். டொக். டொக்.

8

ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு தோட்டத்தைப் பார்த்தாள் பாரதி.

தோட்டத்தில் நான்கு பேர் கடப்பாரையுடன் பூமியைக் கொத்தத் தொடங்கியிருந்தார்கள்.

"என்ன பண்ணுகிறார்கள் ஆன்ட்டி, அவர்களெல்லாம்?"

திடுக்கிட்டுத் திரும்பினாள் பாரதி. அர்ச்சனா அவளுக்கு வெகு அருகே நின்றுகொண்டு ஜன்னலின் கீழ்க் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு தோட்டத்தை வேடிக்கை பார்த்தது.

"நீ வா.. இதையெல்லாம் வேடிக்கை பார்க்க வேண்டாம்"

"ஆன்ட்டி.. யாரோ என் நெஞ்சில் தொம் தொம் என்று இரும்பால் அடிப்பது போலிருக்கிறது எனக்கு.."

"அர்ச்சனா.. நீ என்ன சொல்கிறாய்?"

"என்னை யாரோ இரும்பால் பிளக்கப் போகிறார்களோ என்று எனக்கு பயமாக இருக்கிறது.."

பாரதி அர்ச்சனாவின் தோளில் வைத்திருந்த கையை சட்டென்று எடுத்துவிட்டாள்.

"நீ என்னுடன் வா.." என்றாள்.

"ஏன் ஆன்ட்டி?"

"வா என்றால் வாயேன்.." – ராஜேஷ் கொண்டுவந்து கொடுத்திருந்த எலுமிச்சையை தன் புடவை நுனியில் முடிச்சிட்டிருப்பது நினைவுக்கு வர, தைரியமாகப் பிடித்து சற்றேறக் குறைய இழுத்துக்கொண்டு நகர்ந்தாள், பாரதி.

"ஆன்ட்டி.. தோட்டத்தில் அவர்கள் இரும்பால் பூமியைக் கொத்தும்போதெல்லாம் எனக்கு நெஞ்சை வலிக்கிறதே, ஏன் ஆன்ட்டி?"

"இங்கே வா சொல்கிறேன்.."

அர்ச்சனாவை பூஜையறைக்கு நடத்தினாள் பாரதி. பூஜையறை வாசலுக்கு வந்ததும் நின்றுவிட்டது அர்ச்சனா.

"ஆன்ட்டி நான் உள்ளே வர மாட்டேன்.." என்று அவளிடமிருந்து திமிறியது.

"ஏன்?"

"எனக்கு பயமாயிருக்கிறது.."

"என்ன பயம் – சாமியிடத்தில்? வா.." – பாரதி சட்டென்று அர்ச்சனாவை அந்த பூஜையறைக்குள் தள்ளிவிட்டாள்.

நெருப்பில் பிடித்துத் தள்ளிவிட்டது போல் வீல் என்று அலறிய அர்ச்சனா அப்படியே மயக்கமானாள்.

தோட்டத்தில் ஹோ என்ற சத்தம் கேட்டது.

கடப்பாரையின் முனை புதைக்கப்பட்டிருந்த சவப்பெட்டியின் மூடியில் மோதிய ணங் ஒலியைத் தொடர்ந்து இந்த ஹே என்ற கூச்சல்.

பாரதி மறுபடியும் ஜன்னலுக்கு விரைந்தாள்.

தோட்டத்தில் இப்போது ராஜேஷின் சக்கர நாற்காலியும் சேர்ந்திருந்தது.

சவப்பெட்டி மெல்ல மெல்ல இழுக்கப்பட்டது. சவப்பெட்டி தோண்டி எடுக்கப்பட வேண்டும் என்றவுடனேயே ஆயிரக்கணக்கில் கூலி கேட்ட ஆட்கள், மிகச் சுலபமாகத் தங்கள் வேலை முடிந்துவிட்ட சந்தோஷத்தில் இருப்பது தெரிந்தது.

எங்கேயோ வெகு தூரத்தில் வானம் ஒரு முறை உறுமியது.

சவப்பெட்டியைப் பார்த்ததும் பாரதியை மீண்டும் அபிராமியின் நினைவு தாக்கியது. தோட்டத்தில்தான் இருக்கிறாள் என்று இத்தனை நாள் நினைத்து ஆறுதல் தேடிக்கொண்டிருந்ததுகூட இனி கிடையாது.. அபிராமி எரிந்து சாம்பலாகக் கரைந்துவிடப் போகிறாள்.

பாரதிக்கு நெஞ்சை அடைத்தது.

தோண்டி எடுத்த நான்கு பேரில் இரண்டு பேர் மட்டும் காரேஜிற்குப் போய் பெட்ரோல் கேனை எடுத்து வந்தார்கள். தோட்டத்தில், சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு வந்தான், ராஜேஷ். ஜன்னலருகே வந்து நிறுத்தினான்.

"பாரதி, பெட்டியையே எரித்துவிடவா, அல்லது பெட்டியைத் திறந்து அபிராமியை வெளியே எடுத்து..?"

"வேண்டாம், அவளை வெளியே எடுக்காதீர்கள். என் கண்ணெதிரில் அவளை எரித்தால் என்னால் தாங்க முடியாது.. அப்படியே பெட்டியோடு எரித்துவிடட்டும்.."

சக்கர நாற்காலியைத் திருப்பிக்கொண்டு போனான், ராஜேஷ்.

பெட்டி திறந்து உள்ளேயிருந்து கூந்தல் முடி எடுக்கப்பட்டது.

பெட்டியின் மீது நாற்புறமும் பெட்ரோல் விடப்பட்டது. நெருப்புக் குச்சி கிழித்து வைக்கப்பட்டது.

குப்பென்று நெருப்பு பிடித்துக்கொண்டது. வாழை மர உயரத்துக்கு நெருப்பு எரிந்தது.

நெருப்பு தகதகவென்று எரிந்துகொண்டிருந்தபோது, மீண்டும் வானத்தில் ஒரு குமுறல், எங்கிருந்தோ கறுப்பு மேகங்கள் திரண்டு கூடின.

"மழை.. மழை வரும் போலிருக்கிறது, ராஜேஷ்..!" என்று கத்தினாள், பாரதி. அவள் குரலை அடக்கிக்கொண்டு இன்னொரு இடி உருண்டது.

"ராஜேஷ்.. மழையில் நெருப்பு அணைந்துவிடப் போகிறது..

பார்த்து.." – மறுபடியும் பாரதி கூவினாள்.

ராஜேஷின் மணிக்கட்டில் முதல் துளி மழை பட்டதும், அவனும் கூவினான்.

"என்னா சார் செய்யச் சொல்றீங்க.."

"நெருப்பு அணையக் கூடாது.." ராஜேஷ் பதறினான்.

"டேய், லாரியிலிருந்து தார்ப்பாலின் கவரைக் கழற்றி வாருங்கள்" என்று ஒருத்தன் குரல் கொடுத்தான்.

நான்கு பேரும் ஓடினார்கள். ராஜேஷ் வீல் சேரை சற்று அருகே நகர்த்தி இன்னும் கொஞ்சம் பெட்ரோலைப் பெட்டியின் மீது வீசினான்.

அணையவிருந்த நெருப்பு மீண்டும் பற்றிக்கொண்டது. தார்ப்பாலின் உறையை எடுத்து வந்து நான்கு புறமும் உயரமான கம்புகள் நட்டு அதில் கட்டுவதற்கான ஏற்பாடுகளில் நான்கு வேலையாட்களும் ஈடுபட்டிருக்க, காற்றும் மழையும் நெருப்பை அலைக்கழித்தன. நெருப்பு அணையக் கூடாது என்ற வெறியுடன் ராஜேஷ் அவ்வப்போது பெட்ரோலை வீசிக்கொண்டிருந்தான். மழை வலுத்துக்கொண்டே வந்தது. அவன் தெப்பலாக நனைந்துவிட்டான்.

தார்ப்பாலின் இரண்டு முனைகளில் கட்டப்பட்டுவிட்டது. மற்ற இரு முனைகளில் கட்ட முனைந்தபோது, வேலைக்காரனின் கை வழுக்கியது. தார்ப்பாலின் துணியின் மீது ஏற்கெனவே சேர்ந்திருந்த மழைத் தண்ணீரில் பாரமும் சேர்ந்து இழுக்க, தார்ப்பாலின் உறை மற்றவன் கையிலிருந்தும் வழுக்கி விடுபட்டு எரிந்துகொண்டிருந்த சவப்பெட்டியின் மீது விழுந்தது. மூடியது. தண்ணீரை எதிர்த்து எரிந்துகொண்டிருந்த பெட்ரோலையும் சேர்த்து இப்போது மூடிவிட்டதால், ஆக்சிஜன் இல்லாமல் நெருப்பு குப்பென்று அணைந்து புகை புரண்டு எழுந்தது.

"கடவுளே..!" என்று கத்தினாள் பாரதி.

தலையில் கை வைத்து உட்கார்ந்தான் ராஜேஷ்.

சவப்பெட்டி அணைவதற்காகவே காத்திருந்தது போல சட்டென்று மழை நின்றுபோனது. மேகங்கள் கலைந்து வானம் தெளிவானது.

"தார்ப்பாலினை ஒழுங்காகக் கட்டுங்கள், மறுபடி அணையக் கூடாது.." என்றான் ராஜேஷ், தோல்வி தன் குரலில் அதிர.

பாரதிக்கு இனம் தெரியாத கலக்கம் அடிவயிற்றில் புரண்டது.

கடவுளைத் தவிர வேறு யாரும் இந்த நிலைமையில் அவர்களைக் காப்பாற்ற முடியாது என்று அவளுக்குத் தோன்றியது.
பூஜையறைக்குள் ஓடியவள் திடுக்கிட்டு நின்றாள்.

அர்ச்சனா அங்கு இல்லை.

"அர்ச்சனா.. அர்ச்சனா.."

கடவுளைக் கும்பிடுவதைக்கூட மறந்துவிட்டு அர்ச்சனாவைத்

தேடிக்கொண்டு அவள் பரபரப்பாக ஒவ்வொரு அறையாக நுழைந்தாள்.

மாடியில் நாற்காலி உருளும் சத்தம் கேட்டது.

"அர்ச்சனா..!" பாரதி மாடிப் படிகளில் பரபரப்பாக ஏறினாள். ராஜேஷின் ரூம் கதவைத் தள்ளித் திறந்தாள்.

கட்டிலின் மீது முட்டி போட்டு அமர்ந்து ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது அர்ச்சனா.

"அர்ச்சனா.. மாடிக்கு வராதே என்று சொல்லியிருக்கிறேனே.. ஏன் வந்தாய்?"

அர்ச்சனா திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தது. அப்படியே அச்சாக அபிராமியின் புன்னகை.

பாரதி தன்னையறியாமலேயே யோகி தேவிதாசன் கொடுத்திருந்த எலுமிச்சையை கைக்குள் பிடித்துக்கொண்டாள்.

"கீழேயிருந்து வேடிக்கை பார்க்க நீங்கள் விடவில்லையே.. அதுதான் மேலே வந்துவிட்டேன்.. ஆன்ட்டி, நெருப்பு அணைந்தபோது குபு குபுவென்று புகை வந்ததே, அதன் வாசனை ரொம்ப நன்றாக இருந்தது. இல்லை?"

"அர்ச்சனா, நீ செய்வது எதுவும் நன்றாயில்லை.. கீழே இறங்கு.."

"இறங்காவிட்டால் என்ன செய்வீர்கள், ஆன்ட்டி?"

மிரட்டி சாதிக்க முடியாது என்று தோன்றியது பாரதிக்கு.

"ப்ளீஸ் கண்ணம்மா.. ஆன்ட்டிக்கு நீ இல்லாமல் கீழே போரடிக்கிறது.. வா.."

அர்ச்சனா கட்டிலிலிருந்து குதித்து இறங்கியது. படிகளில் தடதடவென்று கீழே இறங்கி ஓடியது.

***

"நாசம்.. அத்தனையும் நாசம்" என்றார் யோகி தேவிதாசன்.

"நான்தான் முதலிலேயே சொன்னேனே.. நெருப்பு எரிய ஆரம்பித்தபின் நடுவில் அணையக் கூடாது என்று.. முதலிலேயே பக்காவாக ஏற்பாடு செய்துகொண்டிருக்கக் கூடாதா?"

"இல்லை சாமி.. அந்த சமயத்தில் வானம் தெளிவாகத்தான் இருந்தது. மழை வருவதற்கான அறிகுறியே இல்லை.. திடீரென்றுதான் மழை வந்துவிட்டது.." ராஜேஷ் மென்று மென்று பேசினான்.

"தீய சக்திகள் எப்போதுமே சுலபத்தில் விட்டுக்கொடுக்காது. போராடும். எதிர்க்கும். முரண்டு பிடிக்கும். நாம்தான் கவனமாக இருந்திருக்க வேண்டும்.. என் வேலையை நீ இன்னும் கடுமையாக்கிவிட்டாய்.."

"இப்போது என்ன செய்யலாம், சாமி?"

"நெருப்பணைந்து புகை எழும்பும்போது அதில் தீய சக்தியும் கலந்து தப்பித்துவிட்டிருக்கும்.. அதை அடக்குவதற்கு என் பூஜைகளை இரட்டிப்பாக்க வேண்டும், நான்.. உன்னிடம் கொடுத்த எலுமிச்சைகள் போதாது, இனிமேல்.. மந்தரித்த தாயத்துக்களை நீ கட்டியிருக்க வேண்டும்.. கூடியவரை நீயும், உன் மனைவியும் அந்தப் பெண்ணிடம் போகாமல் இருப்பதே நல்லது.."

"கொடைக்கானலில் கொண்டுவிட்டுவிடட்டுமா?"

"நான் பூஜை செய்யும் வரை இதே ஊரில் இருந்தால்தான் நல்லது.. ஒரு வேலைக்காரியைப் போட்டுப் பார்த்துக்கொள்ள முடியுமா என்று யோசி.. கொண்டுவந்த தலைமுடிகளைக் கொடு"

"என்னை கவனித்துக்கொள்ள வந்திருந்த நர்ஸையே ஏற்பாடு செய்கிறேன்.."

"நர்ஸ் பெயர் என்ன?"

"செல்வி.."

"அவள் பெயருக்கும் ஒரு தாயத்து மந்தரித்துத் தருகிறேன். எடுத்துப் போ.."

மூன்று தாயத்துகளையும் சேகரித்துக்கொண்டு, ராஜேஷ் புறப்பட்டான்.

***

"சிஸ்டர்.. அர்ச்சனா இப்போது நார்மலாக இல்லை என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.. அவள் உடம்பில் தீய சக்தி புகுந்திருக்கலாம் என்று சந்தேகப்படுகிறோம்.. அதனால் இந்த தாயத்தை நீங்கள் கட்டியிருங்கள்.."

ராஜேஷ் நீட்டிய தாயத்தை நர்ஸ் செல்வி தயக்கத்துடன் வாங்கிக்கொண்டாள்.

"சிஸ்டர், இன்னும் ஐந்து வாரங்களுக்கு அர்ச்சனாவைப் பார்த்துகொள்வதுதான் உங்கள் வேலை.."

"அவள் ஒரு துடிப்பான பெண்.. ஐ லைக் ஹர் வெரி மச். சந்தோஷமாகப் பார்த்துக்கொள்வேன்" என்றாள் செல்வி, முகம் மலர்ந்து.

"முக்கியமாய் நாளைக்குக் காலையில் நானும், பாரதியும் இருக்க மாட்டோம். பாரதிக்கு இடது கண்ணில் ஒரு முக்கிய ஆப்பரேஷன் செய்து பார்வையை மீட்க டாக்டர் ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணச் சொல்லியிருக்கிறார்.."

"தாராளமாகப் போய் வாருங்கள்.." என்றாள், நர்ஸ் செல்வி. "நான் ஒன்று கேட்டால் தப்பாக நினைத்துக்கொள்ள மாட்டீர்களே?"

"என்ன?" என்றான், ராஜேஷ்.

"அர்ச்சனாவை நீங்கள் ஏன் ஸ்கூலுக்கு அனுப்புவதில்லை?"

"அனுப்பப் போகிறோம்.. இதோ ஜூன் மாதம் வந்தால் அவள் ஸ்கூல் போகத் துவங்கிவிடுவாள். அபிராமி படித்துக்கொண்டிருந்த அதே வகுப்புத் தோழிகளுடன் அர்ச்சனா பழக ஆரம்பிக்கும் முன், அவளைப் பூரணமாகப் புரிந்துகொள்ள வேண்டியது எங்கள் கடமை என்று நாங்கள் நினைத்தோம்.. இந்த மாதத்திலிருந்து அனுப்புவதாகத்தான் இருந்தது. இப்போது இருக்கும் பிரச்சினைகளை யோசிக்கும்போது அனுப்ப முடியவில்லை.."

"என் பொறுப்பில் இருக்கும் வரை அர்ச்சனாவிற்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது" என்றாள் நர்ஸ் செல்வி.

9

போர்வைக்குள் சுருட்டிக்கொண்டு படுத்திருந்தது அர்ச்சனா.

நர்ஸ் செல்வி அந்தப் போர்வையை வெடுக் என்று பறித்தாள்.

அர்ச்சனா திடுக்கிட்டு கண் விழித்தது.

"குட்மார்னிங் அர்ச்சனா.. டயம் ஆகிவிட்டது. எழுந்திரு கண்ணா.."

அர்ச்சனா அழகான கொட்டாவியைப் புறங்கையால் மூடி மறைத்தது.

"ஆன்ட்டி எங்கே?"

"ஆன்ட்டியை இந்நேரம் ஆப்பரேஷன் தியேட்டருக்குக் கூட்டிப் போயிருப்பார்கள்.."

"ஏன்? ஏன்? ஏன்?" – அர்ச்சனா பரபரப்பாகக் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தது.

"ஆன்ட்டிக்கு கண்ணில் ஆப்பரேஷன் பண்ணப் போகிறார்கள்.."

அர்ச்சனாவின் முகம் சிறுத்துப் போனது.

"என்னிடம் ஏன் சொல்லவில்லை?"

"நீ தூங்கிக்கொண்டிருந்தாய்.."

"நேற்றைக்கு ஏன் சொல்லவில்லை?"

"சொல்லியிருந்தால் நீ என்ன செய்திருப்பாய்?"

"போகாதீர்கள் ஆன்ட்டி என்று தடுத்து நிறுத்தியிருப்பேன்"

"ஏன்?"

"ஆன்ட்டிக்கு ஒரு கண் போதும். இன்னொரு கண் வேண்டாம்.."

"ச்சீ அப்படியெல்லாம் பேசக் கூடாது.."

"இப்போது பாருங்கள் இரண்டாவது கண்ணும் போய்விடப் போகிறது.."

"அர்ச்சனா, என்ன இது அபசகுனமாகப் பேசிக்கொண்டு?"

"நீங்கள் வேண்டுமானால் பாருங்கள் அக்கா.."

அர்ச்சனா இறங்கி பாத்ரூமுக்குப் போனது.

***

ஆப்பரேஷன் தியேட்டர்.

சீஃப் டாக்டர் மூக்கையும் வாயையும் மறைக்கும் கேடயத்துணி அணிந்து தயாராயிருந்தார்.

ஆப்பரேஷன் கட்டிலில் பாரதி படுத்திருந்தாள். அனஸ்தீஷியாவின் உபயத்தில் அவள் கண்கள் மூடியிருந்தன.

சீஃப் டாக்டர் அவளுடைய இடது கண் பேண்டேஜ்களை விலக்கினார். காயத்தை சுத்தம் செய்தார். ஆப்பரேஷன் தியேட்டர்களுக்கே உரித்தான பெரிய பிரகாசமான மின்சார விளக்கை நகர்த்தி அவள் கண்களில் பூரண வெளிச்சம் படும்படி அமைத்துக்கொண்டார்.

***

அர்ச்சனா பாத்ரூமுக்குள் இருந்த பல்பை நிமிர்ந்து கூரான பார்வையால் பார்த்தது.

ஸ்விட்சைத் தட்டியது.

ஆப்பரேஷன் தியேட்டரில் இருந்த பல்பு வெகு திடீரென வெடித்தது. மிக அதிக வோல்டேஜ் சப்ளை ஆனதைப் போல அந்த உயர் ரகபல்பு வெடித்துச் சிதறியதில், சீஃப் டாக்டரின் முகம் நிறைய கண்ணாடித் துண்டுகள்.

'ஆ..!' என்று அலறிக்கொண்டு அவர் முகத்தைப் பொத்திக்கொள்ள விரலிடுக்குகள் வழியே ரத்தக் கோடுகள் வழியத் துவங்கின. பல்பின் ஒரு பிரதான கண்ணாடித் துண்டு பாரதியின் வலது கண்ணில் செங்குத்தாகப் பாய்ந்து இறங்கியிருந்தது.

***

டெலிபோன் மணி விடாமல் அடித்தது.

தாயத்தை இடது மணிக்கட்டில் வைத்துக் கட்டும் முயற்சியில் இருந்த செல்வி அதை அப்படியே போட்டுவிட்டு ஓடி ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ, செல்வியா?" – எதிர் முனையில் ராஜேஷின் குரல் மிகவும் பதட்டத்துடன் ஒலித்தது.

"யெஸ்.. கவலைப்படாதீர்கள்.. அர்ச்சனா எழுந்துவிட்டாள்.. அவளை நான் கவனித்துக்கொள்கிறேன்.."

"செல்வி.. இங்கு ஆப்பரேஷன் தியேட்டரில் பல்பு வெடித்துவிட்டது. டாக்டருக்கே கண்களில் காயம்.. பாரதியின் வலது கண்ணில் ஒரு கண்ணாடி பாய்ந்துவிட்டது.." – ராஜேஷின் குரல் அழுகையில் தேய்ந்தது, "நான் வர லேட்டாகும்.. அர்ச்சனாவை கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்..."

"என்னது..?" – செல்வியின் திகைப்பு குரலில் தெறித்தது. உடல் முழுதும் குப்பென்று வியர்த்துவிட்டது அவளுக்கு.

"பாரதியம்மாவுக்கு ஆப்பரேஷன் பண்ண வேண்டாம் என்று அர்ச்சனா சொல்லியது.." என்று அவள் பேசிக்கொண்டிருக்கும்போதே எதிர் முனையில் ராஜேஷ் தொடர்பைத் துண்டித்துவிட்டான்.

"அக்கா.."

அர்ச்சனாவின் குரல் கேட்டதும் செல்வியின் கையிலிருந்த ரிசீவர் வழுக்கிக் கீழே விழுந்தது. தடுமாறி எடுத்துப் பொருத்தினாள்.

"என்னக்கா ஆயிற்று? யாரிடமிருந்து போன்?"

"அர்ச்சனா.." செல்வியின் குரல் திக்கியது. "நீ.. நீ சாப்பிட்டுவிட்டு.."

"அக்கா, இப்போதுதானே எழுந்தேன்.. அதற்குள் சாப்பிடச் சொல்கிறீர்கள்? நான் இன்னும் பல்லே தேய்க்கவில்லையே..

பேஸ்ட்டை எடுத்துக் கொடுங்கள்.."

செல்வி பேஸ்ட் எடுக்க நகர்ந்தாள். அர்ச்சனாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்ததில் கதவில் முட்டிக்கொண்டாள்.

அர்ச்சனாவிடம் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி ராஜேஷ் கொடுத்த தாயத்து நினைவுக்கு வந்தது. அந்த தாயத்தையாவது அணிந்தால் பரவாயில்லை என்று தோன்றியது. அவசரமாக தாயத்து வைத்த ரூமுக்குள் நுழைந்தாள். திடுக்கிட்டாள். கட்ட ஆரம்பித்து, விட்டுவிட்டு வந்த தாயத்தை அதன் இடத்தில் காணோம்.

கை மறதியாக வேறெங்காவது வைத்துவிட்டாளா? பரபரவென்று புத்தகங்கள், துணிமணிகளை நகர்த்திப் பார்த்தாள். தரையிலும் அலமாரியிலும் தேடிப் பார்த்தாள்.

"என்னக்கா தேடுகிறீர்கள்?"

"ஒ.. ஒன்றுமில்லை.."

"ரவுண்டாய் தகரத்தில் பண்ணியிருந்ததே, அதுவா?"

"தாயத்தை நீ பார்த்தாயா அர்ச்சனா?"

"அதன் பெயர் தாயத்தா? இங்கே கீழே கிடந்தது. தெரியாமல் மிதித்தேன். ஷாக் அடித்த மாதிரி இருந்தது. ஐயையோ, இது இருந்தால் ஆபத்து என்று அப்படியே ஒரு பேப்பரில் அள்ளி வெளியில் போட்டேன். அதை ஒரு குருவி கொத்திக்கொண்டு போனதைப் பார்த்தேன்.."

"என்ன காரியம் அர்ச்சனா பண்ணினாய் நீ?"

"ஏன் அக்கா அந்த தாயத்து உங்களுக்கு வேண்டுமா?"

"ஆமாம்.."

"அந்த குருவி அதை நேரே தன் கூட்டுக்குத்தான் எடுத்துப் போயிருக்கும்.. அந்த குருவிக் கூடு மாடியில் எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும்.."

"எங்கே இருக்கிறது?"

"பால்கனியில் உச்சியில் அது கூடு கட்டியிருக்கிறது.. தோட்டத்திலிருந்துதான் வைக்கோல், குப்பை, சணல் கயிறு எல்லாம் எடுத்துப் போகும்.. காட்டுகிறேன்.. வருகிறீர்களா?"

"முதலில் நீ பல் தேய், பூஸ்ட் சாப்பிடு.. அப்புறம் சொல்கிறேன்.." செல்வி, அர்ச்சனாவிடமிருந்து சற்றுத் தள்ளி நின்றே பேசினாள்.

அர்ச்சனா பல் தேய்த்துவிட்டு, பூஸ்ட் சாப்பிட்டுவிட்டு, டவலை எடுத்துக்கொண்டு பாத்ரூமில் நுழையுமுன் நின்றது.

"அக்கா.."

"என்ன?"

"உங்களுக்கு அப்பா அம்மா இருக்கிறார்களா?"

"ம்.."

"என்ன செய்கிறார்கள்?"

"ஏன் கேட்கிறாய்?"

"சொல்லுங்களேன்.."

"அப்பா கேரளாவில் பஸ் கண்டக்டராக இருக்கிறார்.."

"உங்களுக்கு ஏன் கல்யாணம் செய்து வைக்கவில்லை..?"

"யார் சொன்னது எனக்குக் கல்யாணமாகவில்லை என்று? எனக்குக் கல்யாணமாகிவிட்டது. குழந்தைகூட இருக்கிறது.."

"நிஜமாகவா அக்கா? கேர்ளா, பாயா?"

"கேர்ள் பேபி.."

"குட்டிப் பாப்பாவா?"

"இரண்டு வயதாகிறது.."

"நீங்கள் வந்துவிட்டீர்களே.. பாவம் அது அம்மா வேண்டும் என்று அழாதா?"

"என் அம்மாவிடம்தானே விட்டுவைத்திருக்கிறேன்.. என்ன செய்வது? சில சமயம் அதையெல்லாம் பார்க்க முடியாது.. நர்ஸ் உத்தியோகத்தில் கூப்பிட்ட இடத்துக்கு நான் போக வேண்டும். குழந்தையையும் கூட்டிக்கொண்டு அலைய முடியுமா? இரண்டு மூன்று மாதத்திற்கொரு தடவை போய்ப் பார்த்துவிட்டு வருவேன்.. நீ அதிர்ஷ்டக்காரி அர்ச்சனா.. உன்னை ஆசையாய் அம்மா, அப்பாவைப் போலப் பார்த்துக்கொள்ள பாரதி ஆன்ட்டியும், ராஜேஷ் அங்க்கிளும் இருக்கிறார்கள்.. நீ ரொம்ப சந்தோஷப்பட வேண்டும்.."

"எனக்கு சந்தோஷம்தானே..?"

அர்ச்சனா பாத்ரூம் கதவை சாத்திக்கொண்டது.

"நீ குளித்துக்கொண்டிரு.. நான் பிரெட் ஸாண்ட்விச் ரெடி பண்ணுகிறேன்" என்று குரல் கொடுத்துவிட்டு செல்வி அவசரமாக அந்த அறையைவிட்டு நழுவினாள்.

அர்ச்சனா குளித்துவிட்டு வருவதற்குள் மாடிக்குப் போய் அந்த தாயத்தை எடுத்துவிட வேண்டும் என்று முடிவு செய்தாள். படிகளை இரண்டிரண்டாக ஏறினாள். மாடியில் இருந்த ஹாலை ஒட்டி இருந்தது, பால்கனி. பால்கனிக்குள் நுழைந்தாள். இரண்டரையடி உயரத்தில் இருந்தது கைப்பிடிச் சுவர். சற்று உயரத்தில் இருந்தது குருவிக் கூடு. அதிலிருந்து ஆட்டுத் தாடி போல ஆங்காங்கே சிறு கயிறுப் பிறிகள் கீழே நீட்டிக்கொண்டிருந்தன. குருவிக் கூட்டின் அடிப்பாகத்தில் ஒரு மினுமினுப்பு தெரிந்தது. அதுதான் தாயத்தாக இருக்க வேண்டும்.

சுவரைப் பிடித்து, கைப்பிடிச் சுவரில் கால் வைத்து ஏறி, அந்த தாயத்தை அவள் எட்டப் போன நேரம், "அக்கா.." என்று மிக அருகில் இருந்து குரல் கேட்டது.

ஈர டவலுடன் அர்ச்சனா.

“அக்கா.. குழந்தையைத் தவிக்க விட்டுவிட்டு ஒரு அம்மா வருவது தப்பில்லையா, அக்கா?”

"நீ.. நீ.. நகர்ந்து போ.."

செல்வி திக்கினாள். திணறினாள். கை நீட்டி குருவிக் கூட்டைத் தொட யத்தனிக்க, அர்ச்சனா, இரண்டு கைகளாலும் செல்வியின் கால்களையும் பற்றித் தள்ளிவிட்டது.

ஹூப்.

செல்வி தடுமாறி சுவரைப் பிடிக்க முனைந்து வழுக்கி, நழுவி, மாடியிலிருந்து கீழே பூமியில் தொப்பென்று விழுந்தாள். விழுந்த வேகத்தில் தலை முதலில் மோதி, அந்த அதிர்ச்சியில் கழுத்து எலும்பு சட்டென்று முறிந்து, குப்பென்று ஒரு கணத்தில் அடங்கிப் போனாள்.

“விழுந்துவிட்டீர்களா அக்கா?” என்று பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்து கேட்டது அர்ச்சனா.

பதில் சொல்ல செல்வி உயிரோடில்லை.

***

கார் வாசலில் வந்து நின்றது.

ராஜேஷ் மட்டும் கண்ணீருடன் இறங்கியபோது, அர்ச்சனா வாசல் படியிலேயே உட்கார்ந்திருந்தது.

"அங்க்கிள்.. ஏன் அழுகிறீர்கள், அங்க்கிள்?"

அர்ச்சனாவை புறங்கையால் நகர்த்திவிட்டு ராஜேஷ் வீட்டுக்குள் நுழைய முற்பட்டான்.

"அங்க்கிள், நர்ஸ் அக்கா மாடியிலிருந்து குதித்துவிட்டாள்.."

"என்னது?" ஊன்றுகோல்களுடன் நின்று திரும்பினான் ராஜேஷ்.

"அக்கா தோட்டத்தில் கிடக்கிறாள், அங்க்கிள்.."

ராஜேஷ் பதட்டத்துடன் தோட்டத்துக்குப் போனபோது – நர்ஸ் செல்வியின் உடல் மீது பத்துப் பதினைந்து காகங்கள் உட்கார்ந்திருந்தன.

# 10

சுகந்தப் புகை அந்த அறையெங்கும் வியாபித்திருந்தது.

யோகி தேவிதாசன் கையில் ஒரு எலுமிச்சையை உருட்டிக்கொண்டே இருந்தார். அவர் நெற்றியில் வரிசையாகக் கோடுகள்.

எதிரே ராஜேஷ் கலைந்த முகத்துடன் கவலை ததும்ப அமர்ந்திருந்தான்.

தேவிதாசன் கண்களைத் திறந்தார்.

"என்ன நடந்தது?"

"நடக்கக் கூடாததெல்லாம் நடந்துவிட்டது, ஐயா.."

ராஜேஷ் குரல் கம்மச் சொன்னான். "என் மனைவிக்கு இடது கண்ணை சரி செய்வதற்கான ஆப்பரேஷன் தியேட்டரில் பல்பு வெடித்து டாக்டருக்கே கண்கள் போய்விட்டன. பாரதியின் வலது கண்ணும் சிதைந்து பார்வை மொத்தமாகப் போய்விட்டது. வீட்டில் அர்ச்சனாவைப் பார்த்துக்கொள்ள நர்ஸை விட்டுவிட்டுப் போயிருந்தேன். அந்த நர்ஸிற்கே ஆபத்து வந்துவிட்டது. மாடியிலிருந்து அவள் குதித்துவிட்டாள். ஏன் குதித்தாள் என்று தெரியவில்லை. ஆனால் குதித்துவிட்டாள். குதித்ததில் ஸ்பாட்டிலேயே அவுட் அதை தற்கொலை கேஸ் என்று முடிவு செய்ய போலீஸை சம்மதிக்க வைப்பதற்குள் எனக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. பாரதியை நாளைக்கு ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்கிறார்கள். அர்ச்சனா இருக்கும் வீட்டுக்கு வரமாட்டேன் என்று அவள் பிடிவாதம் பிடிக்கிறாள்.."

"நான் கொடுத்த தாயத்துகளை நீ பயன்படுத்தவில்லையா?"

"பயன்படுத்துகிறேன்."

"தாயத்து அணிந்திருக்கும் வரை உங்களுக்கு அபிராமி மூலம் எந்த ஆபத்தும் இல்லை.."

"ஆனால் பயத்திலேயே பாரதி செத்துவிடுவாள், ஐயா.. அர்ச்சனாவை கொடைக்கானலில் கொண்டுவிட்டுவிட வேண்டும் என்று நினைக்கிறேன்.."

"நீயும், பாரதியும் அபிராமிக்கு தப்பு செய்திருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு எதிராக அபிராமியின் தாக்குதல் மிக வலுவாகத்தான் இருக்கும். அவளை முதலில் அடக்க வேண்டும். அமைதிப்படுத்த வேண்டும். அப்புறம்தான் கொடைக்கானலுக்கு அவளை அழைத்துப் போக முடியும். அவளை அடக்குவதற்கு நான்தான் வரவேண்டும்.."

"தயவு செய்து வாருங்கள், ஐயா.."

"நாளைக்கு விடிகாலையில் நான் வருவேன்.. நீயும் தலைக்குத் தண்ணீர்விட்டு குளித்துவிட்டு சுத்தமாக இரு.."

"சரி ஐயா.. காரை எத்தனை மணிக்கு அனுப்பட்டும்?"

"காலை நான்கு மணிக்கெல்லாம் அனுப்பிவிடு. ஆவிகள் பொதுவாக இரவு நேரங்களில்தான் முழு ஆர்ப்பாட்டம் செய்யும். நள்ளிரவுகளில் அவற்றின் கூத்தாட்டம் மிக அதிகம். சூரியோதய நேரத்தில் அவை மிகவும் வலுவிழந்திருக்கும். விடியலின்போது அத்தனை ஆவிகளும் அடங்கிவிடும்.. அதாவது உடல்கள் கிடைக்காத ஆவிகள். அர்ச்சனாவின் உடம்பில் புகுந்துகொண்டிருப்பதால் அபிராமியின் ஆவி பகல் நேரத்திலும் தன் கைவரிசையைக் காட்டுகிறது. ஆனாலும் சூரியோதய நேரம் ஆவிகளுக்கு மிகவும் எதிரான நேரம்.."

தேவிதாசன் தன் கையில் உருட்டிக்கொண்டிருந்த எலுமிச்சையை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு அதை அப்படியே கையால் கசக்கிப் பிழிந்து அந்தச் சாறை நேரே வாயில் விட்டுக்கொண்டார். அந்த எலுமிச்சையின் தோலை அவர் அறை மூலையில் எறிந்தபோது, அதில் சற்றும் ஈரமில்லை. அவருடைய வலுவான விரல்களின் சக்தி பற்றி ராஜேஷிற்கு ஒருவிதமான அச்ச உணர்வு பிறந்தது.

"நாளைக் காலை நான்கு மணிக்கு காரை அனுப்பிவிடுகிறேன், ஐயா.."

"அனுப்பு. இன்று முழுதும் பூஜை செய்து நான் ஒரு தாயத்து தயார் செய்யப் போகிறேன்.. போய் வா.. நான் கவனித்துக்கொள்கிறேன்."

ராஜேஷ் நம்பிக்கையுடன் எழுந்தான்.

***

மரக்கிளைகள் காற்றில் அசைந்துகொண்டிருந்தன.

இரவு முழுதும் ஓய்வெடுத்த பட்சிகள் சற்றே அசைந்து விடியலுக்கு வரவேற்பு சொல்லத் தயாராயின. அடிவானத்தில் சாம்பல் உதிர்ந்து ஒரு வெள்ளிக் கோடு புலப்படத் துவங்கியிருந்தது.

கூடுதலாக ஒரு நாள் ஆஸ்பத்திரியிலேயே பாரதியைத் தங்க வைத்துவிட்டு, ராஜேஷ் வீடு திரும்பியிருந்தான். கண் விழித்து அலாரத்தை நிறுத்தி, குளித்து, விபூதி, குங்குமம் தரித்து, ஹாலில் தன் சக்கர நாற்காலியில் பொறுமையில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

கட்டிலில் எந்த செயலும் அறியாதவள் போல அர்ச்சனா உறங்கிக்கொண்டிருந்தது.

திடீரென்று காரின் முன் விளக்குகள் அளித்த பிரகாசம் கதவு வழியே ஹாலில் நுழைந்து சுவரில் அறைந்ததும், ராஜேஷ் பரபரப்பானான். சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு வாசலுக்கு நகர்ந்தான்.

போர்ட்டிக்கோவில் கார் வந்து நின்றது. டிரைவர் கதவை மரியாதையுடன் திறந்து பிடிக்க, காவி உடையுடன் தேவிதாசன்

பின்னிருக்கையில் தெரிந்தார். கையிலிருந்த கமண்டலத்திலிருந்து சிறிது நீரைக் கீழே தெளித்துவிட்டு இறங்கினார்.

"அர்ச்சனா எங்கே?" என்றார். பாதையில் தனக்கு முன்னே தண்ணீரைத் தெளித்துக்கொண்டே அதன் மீது நடந்து வீட்டுக்குள் நுழைந்தார்.

"தூங்கிக்கொண்டிருக்கிறாள்.." என்றான், ராஜேஷ்.

"இது பூஜை செய்யப்பட்ட தண்ணீர்.." என்று சொன்ன தேவிதாசன், அதைத் தெளித்துக்கொண்டே நடந்தார்.

படுக்கையறைக்குள் அவர் நுழையும்போது அர்ச்சனா திடுக் என்று எழுந்தாள். போர்வையைச் சுருட்டி தேவிதாசன் மீது எறிந்தாள். அவ்வளவு வேகமாக அவள் செயல்படுவாள் என்று ராஜேஷ் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தேவிதாசன் தெளித்த நீர் முழுவதையும் கேடயமாகத் தடுத்து, அந்தப் போர்வை உறிஞ்சிக்கொண்டு, அவர் மீது போர்த்தி முகத்தையே மூடியது.

அந்த சந்தர்ப்பத்தில் தேவிதாசன் படுக்கையறையின் கதவு தாண்டி நுழைய, கீழே இருந்த கம்பளத்தை கவனிக்காதபடி முகத்தை போர்வை மூடியிருக்க –

கம்பளம் அவர் காலைத் தடுக்கிவிட்டது.

தொபேல் என்று குப்புறடித்து விழுந்தார் தேவிதாசன். கையிலிருந்த கமண்டலம் எகிறியது. அதிலிருந்த தண்ணீர் அறையெங்கும் சிதறியது.

அர்ச்சனா தன் மீது அந்தத் தண்ணீர் பட்டுவிடாமல் ஒதுங்கிக்கொண்டாள்.

ஒரே பாய்ச்சலாக அந்த அறையைவிட்டு வெளிப்பட்டாள். ஓடத் துவங்கினாள். தன் சக்கர நாற்காலியிலிருந்துகொண்டே கை நீட்டித் தடுக்க முனைந்த ராஜேஷைத் தவிர்த்துவிட்டு அவள் மாடிக்கு ஓடினாள்.

தேவிதாசன் எழுந்துவிட்டார். கமண்டலத்தில் இன்னும் சற்றே சற்று நீர் அடியில் தங்கியிருந்தது. அதை எடுத்துக்கொண்டு அவர் மாடியேறி அவள் பின்னே ஓடினார்.

ராஜேஷ் ஏதும் செய்ய இயலாதவனாக, கீழேயிருந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

முதல் மாடி தாண்டி மொட்டைமாடி நோக்கி ஓடினாள் அர்ச்சனா.

"டிரைவர்.. டிரைவர்.." என்று டிரைவரை உதவிக்குக் கூப்பிட்டான் ராஜேஷ்.

டிரைவர் ஓடிவந்து விஷயம் புரிந்து, மாடிக்கு ஓடினான்.

மொட்டை மாடிக் கதவைத் திறந்து அர்ச்சனா அங்கே நுழைந்துவிட்டது.

துரத்திக்கொண்டு போன தேவிதாசன் மூச்சிரைக்க நின்றார்.

இனி தப்பிக்க முடியாது.

அரைவட்டமாக நகர்ந்து, நகர்ந்து அர்ச்சனாவை நெருங்கினார், தேவிதாசன். அதே சமயம் டிரைவரும் மாடி வந்து சேர்ந்து தேவிதாசனுக்கு உறுதுணையாக பக்கத்திலேயே நகர்ந்து வந்தான்.

அர்ச்சனா கைப்பிடிச் சுவர்கள் சேரும் மூலைக்குத் தள்ளப்பட்டுவிட்டாள். மருண்ட மான் போல பார்வையை தேவிதாசன், டிரைவர் – இருவர் மீதும் மாற்றி எறிந்தாள்.

அதற்கு மேல் அவள் நகர இடமில்லை. தேவிதாசன் அங்குலம் அங்குலமாக அவளை நெருங்கிக்கொண்டு வந்தார்.

அர்ச்சனா யாரும் எதிர்பாராத காரியம் செய்தாள். கைப்பிடிச் சுவரில் ஏறினாள். வெளியே குதித்தாள்.

தேவிதாசன் அதிர்ந்தார். ஒரே பாய்ச்சலில் அந்த மூலையை அடைந்து எட்டிப் பார்த்தார்.

சுக்கல் நூறான தலையுடன் அர்ச்சனா அங்கே குப்புறடித்துக் கிடப்பாள் என்று எதிர்பார்த்தவருக்கு –

திடுக் என்று நெஞ்சு நின்று போனது.

மரக்கிளையிலிருந்து தாவும் பூனை போல எந்த பாதிப்பும் இல்லாமல் அர்ச்சனா குதித்த நிலையிலிருந்து எழுந்து ஓடினாள்.

தேவிதாசனைவிட டிரைவர்தான் மிகவும் அதிர்ந்துவிட்டான்.

அர்ச்சனா ஓடி, கார்க் கதவைத் திறந்து ஏறினாள். கதவைச் சாத்தி, இக்னீஷனைத் திருப்பினாள்.

இந்தச் சின்ன குழந்தைக்கு பிரேக் எட்டுமா, ஆக்ஸிலேட்டர் எட்டுமா என்று டிரைவர் பதறும்போதே, கார் சீறிப் புறப்பட்டது. கேட்டை கோணலாக மோதி ஒரு புறம் சாய்த்துவிட்டு கார் தெருவில் நுழைந்தது.

தேவிதாசனும், டிரைவரும் பரபரப்பாகக் கீழே இறங்கி வந்தனர்.

கேள்விக் குறியுடன், குழப்பத்துடன் நிமிர்ந்து பார்த்த ராஜேஷிற்கு பதில் சொல்லக்கூட நிற்காமல் டிரைவர் வெளியே ஓடினான்.

தேவிதாசன் பூஜையறையில் நுழைந்தார். கீழே சப்பணமிட்டு அமர்ந்தார். ஒரு எலுமிச்சையை எடுத்து நெற்றியின் நடுப்பொட்டில் வைத்து மணமணவென்று ஏதோ முணுமுணுத்தார்.

எலுமிச்சையை உள்ளங்கை மேட்டால் சப்பக் என்று நசுக்கினார்.

அர்ச்சனா ஸ்டியரிங்கைத் திருப்பினாள்.

திடீரென நெஞ்சில் வலித்தது.

பிரேக்கை நின்றபடி மிதித்தாள்.

கார் நிலையில்லாமல் வலதுபுறம் பாய்ந்து சரிவில் சரிந்து இறங்கி ஒரு அகலமான மரத்தின் மீது மோதி முத்தமிட்டு நின்றது.

கார் மோதிய சத்தம் கேட்டு அக்கம்பக்கத்திலிருந்து மக்கள் ஓடி வரத் துவங்கினர்.

காரைச் சூழ்ந்துகொண்டனர்.

11

பூஜையறையில் அர்ச்சனா கிடத்தப்பட்டிருந்தது.

அதன் நெற்றி நிறைய குங்குமம் தெளிக்கப்பட்டிருந்தது.

கழுத்திலும், கட்கத்திலும் நிறைய வியர்த்துவிட்டிருந்தது.

தேவிதாசன் அதன் எதிரே மணைப் பலகையில் உட்கார்ந்து மந்திரங்களாக ஓதிக்கொண்டிருந்தார்.

அர்ச்சனாவின் உடல் அவ்வப்போது தூக்கிப் போட்டுக்கொண்டிருந்தது.

"காருக்கு நிறைய சேதாரம்" என்று டிரைவர் முனகலாய்ச் சொன்னான்.

"விடு.. ஏற்கெனவே கொடைக்கானல் விபத்தில் கார் ஒன்று தேறாத அளவுக்கு வீணாகிவிட்டது. இன்ஷ்யூரன்ஸ் பணத்தில் வாங்கிய இரண்டாவது கார் இது.. இதுவும் விபத்தில் மாட்டிக்கொண்டுவிட்டது.. கார் போனால் போகிறது. நம்மைப் பிடித்திருக்கிற சனியன் ஒழிந்தால் சரி.." என்றான் ராஜேஷ், முணுமுணுப்பாக.

"அந்தப் பெண்ணை பிடித்திருந்த பேய் விலகிவிடும் சார். மந்திரவாதி பெரிய தாயத்தை அதன் கழுத்தில் கட்டிவிட்டார் பாருங்கள்.."

தேவிதாசன் தாயத்து மாட்டிய கறுப்புக் கயிறை அர்ச்சனாவின் கழுத்தில் கட்டினார். அர்ச்சனாவைத் தட்டி எழுப்பினார்.

"தேவியின் சொரூபமே, எழுந்திரு.."

அர்ச்சனாவின் கண்கள் மெல்லத் திறந்தன. அலங்கமலங்க விழித்தன.

"தேவியின் சொரூபமே, நான் சொல்வதை அப்படியே மறுபடி திருப்பிச் சொல்.. எல்லாம் வல்ல விநாயகனே.."

"எல்லாம் வல்ல விநாயகனே.."

"ஈசனே.. ஈசனின் பாதியை ஆக்கிரமித்துள்ள ஈசுவரியே.."

அவர் சொல்லச் சொல்ல ஒவ்வொரு கடவுளின் பெயரையும் அர்ச்சனா சொல்லிக்கொண்டே வந்தது. கிட்டத்தட்ட அத்தனை தெய்வங்களின் பெயர்களும் சொல்லி முடித்து --

"தேவியே.. என் உடலில் புகுந்திருக்கும் அபிராமி என்ற பெண்ணின் திருப்தியடையாத ஆவியை வெளியேறச் செய்வாயாக.." என்றார்.

அர்ச்சனா அதையே மறுபடி சொல்லியது. உடனே அதன் உடலின் ஒரு துள்ளல். ஹா என்று பெரிதாக மூச்சு பிரிந்தது போல் ஒரு சத்தம்.

பூஜையறையின் கதவருகே நின்றிருந்த ராஜேஷின் மீது ஏதோ மோதியது போன்றதொரு உணர்வு. அர்ச்சனா வலுவிழந்தது போல்

மீண்டும் மயக்கமாகிவிட்டது.

தேவிதாசன் புன்னகையுடன் எழுந்தார்.

"இனி அபிராமி இங்கு வராது.. அதன் உடல் முழுமையாக எரிக்கப்பட்டிருந்தால் என் வேலை இன்னும் சுலபமாக இருந்திருக்கும். புகையாகப் பரவியதால் அதன் சக்தி எனக்குப் பெரும் சவால்விட்டது. என்னுடைய சக்தியையெல்லாம் பிரயோகித்து அதை விரட்டிவிட்டேன். இனி அபிராமி இந்த வீட்டுக்குள் வராது. உங்களைத் தொந்தரவு செய்யாது.."

ராஜேஷ் தட்டுத் தடுமாறி தேவிதாசனின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான்.

"உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை, ஐயா.."

"எழுந்திரு.. போ.. போய் உன் மனைவியை வீட்டுக்குக் கூட்டிவா.."

தேவிதாசன் கண்களை மூடி ஆசீர்வதித்தார்.

ராஜேஷ் ஒரு கவரில் போட்டு நீட்டிய பணத்தை வாங்கி, எண்ணிப் பார்க்காமல் வைத்துக்கொண்டார்.

ராஜேஷ் அபிமானத்துடன் அர்ச்சனாவை நெருங்கினான். தரையில் மெல்ல அமர்ந்து, "அர்ச்சனா" என்று அதை உலுக்கினான்.

அர்ச்சனா கண் திறந்தது.

"அங்க்கிள்" என்று அன்புடன் அவனைக் கட்டிக்கொண்டது.

***

ஸ்பீக்கர்களில் ரிதம் இசை ஒலித்துக்கொண்டிருந்தது.

சோபாவில் உட்கார்ந்திருந்தான், ராஜேஷ்.

நடு ஹாலில் அர்ச்சனா அந்த இசைக்கேற்ப உடம்பை வளைத்து வளைத்து ஆடிக்கொண்டிருந்தது.

சோஃபாவின் இன்னொரு பகுதியில் பாரதி உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் எந்த சலனமும் இல்லை.

"பாரதி.. அர்ச்சனா என்ன அருமையாக ஆடுகிறது, தெரியுமா?"

"ம்.."

"உன்னால் பார்க்க முடியவில்லையே என்று நினைத்தால் எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது.."

"ம்.." என்றாள், உலர்ந்த குரலில்.

அவள் அர்ச்சனாவின் நாட்டியத்தையும் ரசிக்கவில்லை. அதைப் பற்றிய பாராட்டையும் ரசிக்கவில்லை என்பது அவள் குரலில் இருந்த ஆர்வமின்மை மூலம் புரிந்தது.

இசை முடிந்ததும் அர்ச்சனா மூச்சிரைக்க ஓடிவந்து ராஜேஷின் மடியில் தலை சாய்த்துக்கொண்டது.

ராஜேஷிற்கு நெகிழ்வாய் இருந்தது. அதன் தலையை ஆதரவாகத்

தடவிக் கொடுத்தான்.

"எவ்வளவு நல்ல குழந்தை இது. அநியாயமாக விதி இதன் உடலில் புகுந்து விளையாட்டு காட்டிவிட்டதே.."

"அங்க்கிள்.. எனக்கு தூக்கம் வருகிறது.."

"சாப்பாடு ரெடியா என்று பார்.. ரெடியாயிருந்தால் சாப்பிட்டுவிட்டுப் படுத்து விடு, கண்ணா.." என்றான், ராஜேஷ்.

சமையல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெண்மணி, "வா, அர்ச்சனா.. சாப்பாடு ரெடி.." என்று குரல் கொடுத்தாள்.

அர்ச்சனா துள்ளிக்கொண்டு ஓடியது.

***

அன்றிரவு.

படுக்கையறையில் ரூம் ஸ்ப்ரேயரின் சுகந்த மணம் பரவியிருந்தது.

மெத்தையில் புரண்டு பாரதியை நெருங்கினான் ராஜேஷ்.

"என் கம்பெனியில் எனக்கு மூன்று மாதம் லீவு கொடுத்திருக்கிறார்கள், பாரதி.."

"எதற்கு?"

"பொய்க்கால் பொருத்தி நான் நடை பழகுவதற்கான நேரம். அதற்கான முழு செலவும் கம்பெனி ஏற்றுக்கொள்கிறது.. அது மட்டுமில்லை.. நாம் அமெரிக்கா போகிறோம்.."

"கம்பெனி கான்ஃபரன்ஸா?"

"இல்லை.. உனக்கு கண்களை மீட்க முடியுமா என்று உலகின் மிகச் சிறந்த டாக்டர்களிடம் விசாரிப்பதற்காக.."

"இதற்கும் கம்பெனி பணம் தருகிறதா?"

"ஆமாம்.. என் ஒருத்தனால் போன வருடம் நாற்பது லட்சம் லாபம் சம்பாதித்த கம்பெனி என் சர்வீஸை மிகவும் மதிக்கிறது. என்னை வேறு போட்டிக் கம்பெனியில் கூப்பிடுகிறார்கள் என்று தெரிந்தவுடன் என்னைத் தக்க வைத்துக்கொள்வதற்காக இந்த தாராள மனசு.."

"என்னிடம் நீங்கள் சொல்லவேயில்லையே.."

"இந்த சந்தர்ப்பத்தில் சொல்லலாம் என்று ரிஸர்வ் பண்ணி வைத்திருந்தேன்.." என்றான், ராஜேஷ்.

அவள் வெப்பமான வயிற்றில் அவன் கை பதிந்தது. மெல்ல விரலோடியது. அவளுள் சிலிர்ப்பூட்டியது.

"ஹேய்.."

"எத்தனை நாளாயிற்று.." என்று பெருமூச்சு எறிந்தான் அவன். "இந்த நொண்டிக் கால் உனக்கு எரிச்சலேற்படுத்துமா, பாரதி?"

"ச்சீ, என்ன பேச்சு இது?" என்றாள் பாரதி, சிணுங்கலாக. "எனக்குக் கூடத்தான் இரண்டு கண்ணும் இல்லை.. அதற்காக என்னை கோயில்

வாசலில் பிச்சை எடுக்கவா அனுப்பப் போகிறீர்கள்?"

அவள் பக்கம் அவன் திரும்பிப் படுத்தான். அவன் கழுத்து ரோமத்தை நகத்து நுனியால் சீண்டிவிட்டாள்.

ஹம்க் என்று சிலிர்த்தான் அவன். உதடுகளை அவன் கழுத்தில் பதித்துத் தேய்த்தாள்.

"ராஜேஷ்.. இது எதற்கு?"

அவன் கழுத்தில் கட்டியிருந்த தாயத்தை பல்லால் கடித்து இழுத்துக் கேட்டாள்.

"இது இனிமேல் வேண்டாம்.." என்றான், ராஜேஷ். "அர்ச்சனாவின் கழுத்தில் கட்டியிருக்கும் தாயத்து அபிராமியிடமிருந்து அவளைக் காப்பாற்றிவிடும். இனி அர்ச்சனாவால் நமக்கு ஆபத்து இல்லை என்கிறபோது, நாம் கட்டியிருக்கும் தாயத்துகள் தேவையில்லை.."
என்று அவளை இழுத்து தாயத்தை விரலால் வருடினான் அவன்.

"ராஜேஷ், இன்னொரு விஷயம் சொன்னால் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?"

"என்ன?"

"அர்ச்சனா நமக்கு வேண்டாம்.."

"என்ன பாரதி இப்படிச் சொல்கிறாய்?"

"அவள் வந்ததிலிருந்து நமக்கு பிரச்சினைகள்தான் ராஜேஷ். மனநிம்மதியோடு ஒரு நாள்கூட நாம் இருந்ததில்லை. அபிராமியின் ஆவிதான் அவளை ஆட்டுவித்தது என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் அர்ச்சனாவையே என்னால் இனிமேல் நம் குடும்பத்தில் சேர்த்துக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை.. அவளை பழையபடி அவளுடைய விடுதியிலேயே கொண்டுபோய் சேர்த்துவிடுவோம், ராஜேஷ். நாம் வெளிநாடு போகும்போதெல்லாம் அவளையும் இழுத்துக்கொண்டு போக முடியாது. அவள் நம்முடன் வருவதையும் நான் விரும்பவில்லை.."

ராஜேஷ் சற்று நேரம் மௌனம் சாதித்தான்.

"இப்போது அவள் பழைய அர்ச்சனா இல்லை, பாரதி.."

"வேண்டாம்.. அவளைப் பற்றிப் பேசி இப்போதிருக்கும் மூடைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம், ராஜேஷ்.."

"சரி.." என்றான், ராஜேஷ். "நீ சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது. அமெரிக்கா போகும்போது அவளை அழைத்துப் போவது வீண். அமெரிக்கா போகிறோம் என்பதையே காரணமாகச் சொல்லி நடராஜனிடம் குழந்தையைத் திருப்பித் தந்துவிடுவோம். விடுதிக்குக் கொடுத்த நன்கொடை தவிர புதிதாக ஒரு தொகை கொடுத்தால், அவர் ஒன்றும் சொல்ல மாட்டார்.."

"அப்படியானால் இப்பொழுதே அவருக்கு போன் பண்ணுங்கள்"

"இந்த அகாலத்திலா?"

"பரவாயில்லை, அவர் விடுதியில்தானே இருப்பார்? அப்புறம் உங்களுக்கு மனசு மாறிவிடும்.."

பாரதி கட்டிலில் புரண்டு, இருட்டில் தடவி டெலிபோனை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

ராஜேஷ் படுக்கை விளக்கைப் பொருத்திக்கொண்டான்.

கொடைக்கானல் எண்களை சுற்றினான்.

மூன்று முறை மணியடித்ததும், நடராஜன் எடுத்தார்.

"இந்த நேரத்தில் தொந்தரவு செய்வதற்கு மன்னியுங்கள் சார். நான் ராஜேஷ் பேசுகிறேன் மெட்ராஸிலிருந்து.."

"சொல்லுங்கள், ராஜேஷ்.. எப்படியிருக்கிறீர்கள்? அர்ச்சனா எப்படியிருக்கிறாள்? உங்கள் வீட்டில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் பற்றிக் கேள்விப்பட்டேன். மிக வேதனையடைந்தேன்.." என்றார் நடராஜன், மறுமுனையில் தெளிவான குரலில்.

"சார், ஒரு சின்ன உதவி.."

"என்ன?"

"என் மனைவியின் கண் பார்வை மீட்பதற்கான சிகிச்சைக்காக நாங்கள் அமெரிக்கா போகிறோம்.. அர்ச்சனாவை உங்களிடம்.."

"ஓயெஸ்.. அர்ச்சனா நீங்கள் திரும்பி வரும் வரை என்னிடமே இருக்கட்டும்.. நானே இன்னும் மூன்று நாட்களில் மெட்ராஸ் வருகிறேன் – வேறொரு வேலையாக.. அப்போது நானே அவளை அழைத்துப் போகட்டுமா?"

"உங்களுக்கு சிரமம் இல்லையென்றால்.."

"சிரமம் ஏதுமில்லை.. இன்னும் மூன்று நாளில் உங்களை சென்னையில் சந்திக்கிறேன்.." என்றார் நடராஜன்.

ரிசீவரை வைத்துவிட்டு, பாரதியை இறுக்கி அணைத்துக்கொண்டான் ராஜேஷ்.

"பிராப்ளம் ஸால்வ் ஆகிவிட்டது. அவரே வருகிறாராம், மெட்ராஸிற்கு.." என்றான் ராஜேஷ்.

அவர்கள் ஒவ்வொன்றாக அவிழ்க்கத் துவங்கினர்.

"அர்ச்சனாவிடம் எப்படிச் சொல்வது என்றுதான்.." என்று ராஜேஷ் இழுத்தான்.

"ப்ளீஸ், மறுபடி அவளைப் பற்றிய டாபிக் வேண்டாமே.." என்று அவன் வாயைத் தன் வாயால் பொத்தினாள், பாரதி.

காலையில் கிறக்கத்துடன் எழுந்து பெட்ஷீட்டைச் சுருட்டி லாண்டரிக்கு அனுப்பிய ராஜேஷிற்கு அவர்கள் இரவு கழற்றி வைத்த இரண்டு தாயத்துகளும் அந்தப் போர்வையோடு போய்விட்டது தெரியாது.

12

பாரதி குரலில் சிணுங்கலைச் சேர்த்துக்கொண்டாள்.

"எனக்கு வாழ்க்கை ரொம்ப போரடிக்கிறது ராஜேஷ். மூன்று மாதத்துக்கு முன்னால் அவ்வப்போது பார்ட்டிகளுக்குப் போவோம்.. பிக்னிக், டூர் என்று எங்கேயாவது கிளப்பில் ஏற்பாடு செய்வார்கள். எதுவும் இல்லாமல் ரொம்ப ரொம்ப எனக்கு போர் அடிக்கிறது.."

"என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?" ராஜேஷ் நியூஸ்பேப்பரை மடித்து வைத்துவிட்டுக் கேட்டான்.

"எங்கேயாவது போக வேண்டும்.."

"உன்னால் என்ஜாய் பண்ண முடியுமா, பாரதி"

"கண்கள் தெரியவில்லை.. ஆனால் அட்லீஸ்ட் நீங்கள் பக்கத்தில் இருப்பீர்களே.."

"நம் வெளிநாட்டு டிக்கெட்களை வாங்கித் தரும் டிராவல் ஏஜென்ஸியே ஏதோ ஒரு ஜாலி டூர் ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள்.. நாமும் கலந்துகொள்வோமா?"

"ப்ளீஸ் ராஜேஷ்.."

"அர்ச்சனாவையும் அழைத்துக்கொள்வோம்.. இதற்கப்புறம் அர்ச்சனாவுடன் நாம் சேர்ந்து எங்கும் போகப் போவதில்லை.."

"நோ.. அர்ச்சனா வேண்டாம்.."

"சரி, அர்ச்சனா வேண்டாம்" என்றான் ராஜேஷ், ஏமாற்றத்துடன். "குழந்தையை மறுபடி தனியே விட்டுப் போகிறோமோ என்ற குற்ற உணர்ச்சிதான் எனக்கு.."

"அதுதான் சமையல்கார மாமி இருக்கிறாளே துணைக்கு.."

"சரி" என்றான் ராஜேஷ், அரை மனதுடன்.

அர்ச்சனாவிடம் கூப்பிட்டுச் சொன்னபோது அது தன் ஏமாற்றத்தைக் கசப்புடன் விழுங்குவது தெரிந்தது.

"சரி அங்க்கிள்.. பத்திரமாகப் போய்விட்டு வாருங்கள்" என்றது, தன் தாயத்தைத் திருகிக்கொண்டே.

***

டூரிஸ்ட் பஸ்ஸில் ராஜேஷிற்காக ஒரு சக்கர நாற்காலியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஆந்திரா எல்லையில் இருந்த ஒரு சிற்றூரில் பஸ் மாலை காபிக்காக பிரேக் அடித்தது.

"இங்கே இயற்கை அழகு மிகுந்த ஒரு ஏரி இருக்கிறது. அதில் படகு சவாரி செய்ய விரும்புபவர்கள் செய்யலாம்.. ஆனால் இன்னும் ஒன்றரை மணி நேரத்தில் பஸ்ஸிற்குத் திரும்பி வந்துவிட வேண்டும்" என்று கைடு அறிவித்தார்.

"ராஜேஷ்.. நாமும் போட்டிங் போவோமா?" பாரதி அவன் காதைப்

பிடித்துத் திருகினாள்.

"போவோம். ஆனால் ஒரு கண்டிஷன்.. நான்தான் ஓட்டுவேன்."

"ராஜேஷ்.. உங்களுக்கு என்ன பைத்தியமா? இன்றைக்குத்தான் முதன் முதலில் செயற்கைக் கால் மாட்டியிருக்கிறீர்கள்.. உங்களுக்கு அந்த ஸ்ட்ரெயின் வேண்டாம்.."

"கால்தான் சரியில்லையே தவிர, என் கைகளில் இன்னும் சக்தி குறையவில்லை, பாரதி. பெடலிங் போட் எடுக்க வேண்டாம். துடுப்பு போட்டில் போவோம், பாரதி.."

"வேண்டாம், ராஜேஷ்.."

"அப்படியானால் போட்டிங்கே வேண்டாம்.. உனக்கு என் மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா? ஊட்டியிலும், கொடைக்கானலிலும், உதய்பூரிலும் நான் போட் ஓட்டியிருக்கிறேனா இல்லையா?"

"சரி.. என்னாலும் எந்த உபயோகமும் இருக்காதே என்று யோசித்தேன், ராஜேஷ்.."

"யாமிருக்க பயமேன்?" என்றான், ராஜேஷ்.

கூட வந்த பயணிகள் சற்று ஆச்சரியமாக வேடிக்கை பார்த்தபோது, ராஜேஷிற்கு பெருமையாகவே இருந்தது.

இருவர் செல்லும் படகில் முதலில் பாரதி ஏறி மையமாக அமர்ந்தாள். கைடு உதவியுடன் ராஜேஷ் படகில் இறங்கி தன்னைப் பொருத்திக்கொண்டான்.

"ரொம்ப தூரம் போய் விடாதீர்கள், சார்.." என்று சொல்லிவிட்டு கைடு இரு துடுப்புகளையும் ராஜேஷிடம் நீட்டினான்.

ராஜேஷின் வலுவான தோள்கள் அசைந்தன. படகு அநாயாசமாக நகர்ந்தது. கரையிலிருந்த ஒன்றிரண்டு பேர் உணர்ச்சிவசப்பட்டு கை தட்டினார்கள்.

ராஜேஷின் சக்தி வாய்ந்த வீச்சுகளில் படகு வேகமாக நகர்ந்தது.

பாரதி இரு கன்னங்களிலும் கைகளால் பொத்திக்கொண்டாள்.

"காற்று எவ்வளவு குளுமையாக இருக்கிறது..!" என்றாள். "ராஜேஷ் என்னால் பார்க்க முடியவில்லை.. நீங்கள்தான் சூழ்நிலையை எனக்கு வர்ணிக்க வேண்டும்.."

"நீளமான ஏரி, பாரதி. ஆங்கில எஸ் போல வளைந்து திரும்புகிறது. ஒரு புறம் அரவணைத்து மலைகள், பச்சைப் பசேல் மலைகள். இன்னொரு புறம் காடு போல வளர்ந்த மரங்களும், தோட்டமும்.. இட் இஸ் லவ்லி.. சூரியன் தூரத்தில் மறைந்துகொண்டிருப்பதால் வானத்தில் ஆரஞ்சு நிறம் அமர்க்களமாயிருக்கிறது.."

பாரதியின் மணிக்கட்டின் மீது ஒரு நீர்த்துளி விழுந்தது. உடனே இன்னொரு நீர்த்துளி. உடனே இன்னொன்று.

“ராஜேஷ்.. துடுப்பிலிருந்தா தண்ணீர் தெளிக்கிறது?”
“இல்லை.. மழைத்துளி..” என்றான் ராஜேஷ், அண்ணாந்து பார்த்து.
“மழை வரப்போகிறதா? கரைக்குப் போய்விடலாம், ராஜேஷ்” என்று பாரதி பதறினாள்.
“பயந்தாங்குளி.. இது வெறும் சாரல்..”
இன்னும் சற்று தூரம் ஏரிக்குள் நகர்ந்தான் ராஜேஷ்.
கரையோரம் வளர்ந்திருந்த மரங்களினூடே இப்போது சில பழைய கட்டிடங்கள் அங்கங்கே தென்பட்டன.
திடீரென்று சடசடவென்று மழை பெய்யத் துவங்கியது. ராஜேஷ் தலையில் தடதடவென்று தண்ணீர் பொழிந்து நெற்றி வழியே வழிந்து கண்களுக்குள் இறங்கி பார்வையை மறைத்தது மழை. ராஜேஷ் தண்ணீரை கண்களிலிருந்து வழிப்பதற்காகத் தன்னிச்சையாக கையை உயர்த்த அவன் கையிலிருந்து துடுப்பு நழுவி தண்ணீருக்குள் போய்விட்டது.
தொளப் என்ற சத்தம் கேட்டு பாரதி பதறினாள். ராஜேஷே தண்ணீரில் விழுந்துவிட்டானோ என்ற அச்சத்தில், “ராஜேஷ்..!” என்று கூப்பிட்டு பதறி கையை நீட்டி அவனை ஸ்பரிஸித்ததும்தான் அமைதியானாள்.
“போதும் ராஜேஷ், கரைக்குப் போகலாம்..”
ஒற்றைத் துடுப்பு படகை சுழலச் செய்தது.
மழை திடீரென்று வலுத்தது. அருவிக்குக் கீழே நிற்பது போல் தலையிலும், தோள்களிலும், முதுகிலும் அறைந்து இறங்கி படகில் சேகரமாகத் துவங்கியது.
ராஜேஷின் கை ஓய்ந்தது. காற்று படகை அலைக்கழித்துச் சென்று கரையில் மோதியது.
“பாரதி.. மழை நிற்கும் வரை இங்கே மரத்தடியில் நிற்போமா?” என்றான் ராஜேஷ்.
மழையில் தெப்பலாக நனைந்துவிட்ட பாரதி, உடம்போடு ஒட்டிக்கொண்ட ஈர உடையின் காரணமாக குளிரில் நடுங்கினாள்.
படகு ஒரு மரத்தின் வேரில் மோதி குறுக்கில் மாட்டி நகராமல் நின்றுவிட்டது.
“வா பாரதி..” ராஜேஷ் அவள் கையைப் பற்றிக்கொண்டான்.
பாரதி தடுமாறி எழுந்து படகில் சேர்ந்திருந்த தண்ணீரில் தொளப் தொளப் என்று நடந்து படகு விளிம்பு தடுக்கி வெளியே விழுந்தாள்.
ராஜேஷும் இறங்கினான்.
காற்றில் மரங்கள் சீறின.
“ராஜேஷ்..”
“பாரதி, என் கையைப் பிடித்துக்கொள்.. இங்கே பக்கத்தில் ஒரு

கட்டிடம் தெரிகிறது.. அங்கே போய்விடுவோம்.. மழை நிற்கும் வரை அங்கே ஒதுங்கியிருப்போம்.."

"பஸ் நம்மை விட்டுவிட்டுப் போய்விடாதா, ராஜேஷ்?"

"போகாது வா.."

இருவரும் நகர்ந்து, சீறும் மழைக்காற்றில் அந்தக் கட்டிடத்தை நெருங்கினார்கள்.

கட்டிடத்தின் வாசலில் ஒரு கிழவி முற்றிலும் போர்த்திக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவள் கை நீட்டி பிச்சை கேட்பது போல் இருந்தது. ஆனால் குரல் இளமையாக வந்தது.

"நீங்கள் இரண்டு பேர் மட்டும் அமெரிக்கா போகிறீர்களே.. என்னை விட்டுவிட்டு.."

"ராஜேஷ்." – பாரதி அவன் புஜத்தை இறுக்கிப் பிடித்தாள். "இது நர்ஸின் குரல் போல் இல்லை?"

ராஜேஷ் திடுக்கிட்டு நின்றுவிட்டான்.

"நர்ஸ் செல்வியின் குரல்தான் இது.."

இன்னொரு மின்னல் அடித்ததும், கிழவி எழுந்து நகர்ந்துவிட்டாள்.

அந்தக் கட்டிடத்துக்குள் பாரதியுடன் நுழைந்தான் ராஜேஷ்.

இருவரும் முற்றிலும் நனைந்திருந்ததால் குளிர் அபாரமாகத் தாக்கியது, தன்னிச்சையாக இரு உடல்களும் நடுங்கின.

லைட்டரை ஏற்றினான் ராஜேஷ்.

அது ஒரு பாழடைந்த சர்ச் என்று தெரிந்தது. சர்ச்சா அல்லது வெறும் பிரார்த்தனைக் கூடமா என்று புரியவில்லை. ஏதோ போரில் வெடிகுண்டால் தாக்கப்பட்டு சிதைந்தது போல் சுவர்கள் தாமரை இதழ்கள் போல வெளிப்புறமாகப் பிளந்திருந்தன.

லைட்டர் அணைந்தது.

மின்னல் ஒன்று மறுபடி வெட்டியது. சுவரில் தெரிந்த ஸ்விட்ச் ஒன்றைத் தட்டினான் ராஜேஷ். அவன் எதிர்பார்க்காத அதிசயமாக ஒரு மின்சார பல்பு ஒளிர்ந்தது. அதன் வெளிச்சத்தில் படிகள் இறங்குவது தெரிந்தது.

வெளியே மழை வலுத்தது.

பாரதியும், ராஜேஷும் ஒருத்தர் கையை மற்றவர் இறுக்கமாகப் பற்றிக்கொண்டிருந்தனர்.

"ரொம்பப் பழைய கட்டிடம் இது.." என்று பற்கள் கிடுகிடுக்கச் சொன்னான், ராஜேஷ்.

திடீரென்று மின்சார விளக்கு அணைந்தது.

வெளியே இத்தனை நேரம் இருந்த மங்கலான வெளிச்சம்கூட இப்போது இல்லை.

ராஜேஷின் மிக அருகே ஒரு மூச்சு சத்தம் கேட்டது. பாரதியின் மூச்சைத் தவிர இன்னொரு மூச்சு.

ராஜேஷ் பதறி "யாரது?" என்றான் இருட்டில்.

ராஜேஷின் பதட்டம், கண்களில்லாத பாரதியிடம் இரட்டிப்பாகத் தாக்கியது.

"ராஜேஷ்.. என்ன ராஜேஷ்?" என்று கேட்டபோது அவள் கூந்தலை யாரோ பிடித்து இழுப்பது போல் இருந்தது.

அவள் துள்ளினாள். ராஜேஷின் பிடி நழுவியது. யாரோ அவளைப் பிடித்து இழுத்து ஹா ஹா என்று காதருகில் வெப்பமான மூச்சு செலுத்த, பாரதியின் இதயம் தடக் என்று எகிறியது.

"ராஜேஷ்.." என்று இருட்டில் அவள் கை வீசித் தேடினாள்.

அவளுக்குக் கிடைத்த கையைப் பற்றி, உடனே உதறினாள். காரணம் அந்தக் கை ராஜேஷின் கையாக இருக்க முடியாது. கம்பளியால் தைத்தது போல் புஸு புஸுவென்று முடி இருந்தது.

ராஜேஷ் பாரதியைத் தேடி கையை நீட்ட, அந்தக் கை சில்லிப்பான சுவரில் மோதியது.

"வா.. வா.. வா.." என்று சுவர் எங்கும் நர்ஸ் செல்வியின் குரல் எதிரொலித்தது.

பாரதி தப்பான திசையில் ஓடி படிகளில் தடுக்கி, உருண்டு உருண்டு உருண்டு கீழே இறங்கும் சத்தம் கேட்டது.

"பாரதி.. பாரதி.." என்று குரல் கொடுத்தான் ராஜேஷ். ஈரம் சொட்டச் சொட்ட, சுவரைத் தடவினான்.

திடீரென்று அணைந்த மின்சார பல்பிற்கு உயிர் வந்தது.

ராஜேஷின் நிழல் அவனுக்கு முன்னால் நீண்டது. அதைக் கண்டே அவன் துணுக்குற்று ஒரு கணம் நின்றான். சுதாரித்தான்.

"பாரதி, பாரதி.." என்று குரல் கொடுத்தபடி படிகளில் இறங்க ஆரம்பித்தான்.

படிகள் வளைந்து திரும்பும் இடத்தில் ஒரு உருவம் கிடந்தது. தலை முதல் கால் வரை ஆரஞ்சு, வெள்ளை, பச்சை என்று தேசியக் கொடியைப் போர்த்தியது போலப் போர்த்தியிருந்தது.

அந்த உலர்ந்த துணியைப் பார்த்ததும் ராஜேஷ் அந்தத் துணியைக் கவர நினைத்தான். கவர்ந்து, கீழே உருண்டு கிடந்த பாரதிக்கு மாற்றுத் துணி கொடுத்தாக வேண்டும்.

ராஜேஷ் படிகளில் நொண்டி நொண்டி இறங்கினான்.

அவனுடைய மரக்கால் அந்த நிசப்த அமைதியில் டொக் டொக் டொக் என்று பிரமாண்ட பயங்கரமாக ஒலித்தது. ஒரு படி தடுக்கி வழுக்கி விட இரண்டு படிகளை சரிந்து இறங்கினான் ராஜேஷ். அந்த உருவத்தை நெருங்கிவிட்டான்.

குனிந்து உட்கார்ந்து துணியை உருவ முனைந்தபோது, அந்த உருவ மூட்டை சறுக்கி இரண்டு படிகள் இறங்கியது.

ராஜேஷ் சட்டென்று அதைப் பிடித்து துணியை உருவினான்.

வாழ் நாளிலேயே அவ்வளவு பயங்கரமான காட்சியை அவன் பார்த்ததில்லை. கட்டிடத்தின் வாசலில் முன்னதாக அவன் பார்த்த பிச்சைக்காரக் கிழவி வாய் பிளந்து சிரித்தபடி அப்படியே உறைந்து போயிருந்தாள். அவளுடைய கண்கள் மட்டும் இடதும் வலதுமாக உருண்டன. மூக்கில் மூச்சு இல்லை. மார்பில் ஏற்ற இறக்கம் இல்லை.

ராஜேஷ் அலறி அந்த உருவத்தை உதறினான்.

அது தென்னை போல படிகளில் உருண்டு உருண்டு உருண்டு இறங்கியது. கீழ்ப்படிகளில் கவிழ்ந்திருந்த பாரதி, உடம்பெங்கும் காயத்துடன் கையூன்றி எழுந்திருக்க முனைந்தபோது அந்த உருவம் வந்து அவள் மீது மோதி இருவருமாக சேர்ந்து உருண்டனர்.

பாரதியின் அலறல் இடைவிடாமல் அடுத்த அறுபது நொடிகளுக்குக் கேட்டு மொத்தமாக அடங்கிப் போனது.

ராஜேஷ் பதறி உட்கார்ந்துவிட்டான்.

"ராஜேஷ்.."

பாரதியின் குரல்.

கீழே எங்கோ அதலபாதாளத்திலிருந்து குரல் வந்தது. குரலில் பதட்டம் இல்லை. பரபரப்பு இல்லை. அன்புடன் வரவேற்கும் நட்பு இருந்தது.

"ராஜேஷ்.. எனக்குத் தனியாகப் போக பயமாயிருக்கிறது.. நீங்களும் வாங்களேன்.."

ராஜேஷ் தடுமாறி சுவர் பிடித்து எழுந்தான்.

சுவர் வழுக்கியது. சுதாரிக்குமுன் படிகளில் தடுமாறி, உருண்டு உருண்டு உருண்டு உருண்டு –

கீழே போய்க்கொண்டேயிருந்தான்.

***

மழை ஓய்ந்தபின், பகல் வெளிச்சத்தில் அந்தக் கட்டிடத்தில் இரண்டு பேருடைய விறைத்த உடல்களும் கண்டெடுக்கப்பட்டன.

***

"ஐயா"

அர்ச்சனா பொங்கிப் பொங்கி அழுதது.

"என்னிடம் ஆசை ஆசையாய் இருந்த அங்கிளும் இப்போது இல்லை. ஆன்ட்டியும் இப்போது இல்லை. நான் மறுபடியும் அநாதையாகிவிட்டேனா, ஐயா?"

"நான் உயிருடன் இருக்கும் வரை நீ அநாதை என்று நினைப்பதே தப்பு, செல்லம்மா.."

நடராஜன் அர்ச்சனாவை ஆதரவாக இறுக்கிக்கொண்டார்.

"கழுத்தில் இதென்ன தாயத்து?"

"ஐயா, அங்க்கிள் நினைவாக இந்த தாயத்து எப்போதும் என் கழுத்திலேயே இருக்கட்டும்.."

அந்த வீட்டை மேலும் கீழும் பார்த்துவிட்டு அர்ச்சனா நடராஜனின் கையைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்தது. காத்திருந்த டாக்ஸியில் ஏறியது.

அதன் கண்கள் நனைந்திருந்தன.

முற்றும்

*ஒரு நிமிடம்:*

*கதையைப் படித்துக்கொண்டு வரும்போது, அங்கங்கே அமானுஷ்யமாக நிகழ்ந்த நிகழ்வுகளுக்கெல்லாம் கடைசிப் பக்கத்தில் விஞ்ஞான ரீதியாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்துப் படித்தவர்களுக்கு..*

*மன்னிக்கவும், இக்கதையில் விஞ்ஞானம் இல்லை.*

*விஞ்ஞானத்தில் விளக்கமில்லாத பல நிகழ்வுகள் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளன. விடையில்லாமல் ஆழப் புதைந்துள்ள இந்த ரகசியங்களின் பரிமாணங்களைத் தெரிந்துகொள்ள வேட்கையில்லாத மனிதனே இல்லை.*

*'மரணத்துக்குப் பின்..?' என்ற கேள்விக்கு விஞ்ஞானமும், ஆன்மிகமும் இப்போதும் விடை தேடிக்கொண்டிருக்கின்றன.*

*பெற்றோரின் வசதிக்காக, இரவில் தனிமையில் விடப்பட்டு, அச்சத்தின் விளிம்புகளுக்குத் தள்ளப்பட்ட ஒரு குழந்தையின் கோபமே இக்கதையின் அச்சாணி.*

*'பொய் என்று முற்றிலுமாக ஒதுக்கிவிட முடியாத ஒரு சங்கதி - ஆவிகள்' என்று பலருடைய அனுபவங்கள் மூலம் நாங்கள் அறிந்துகொண்ட பின்னர்தான் 'மௌன முழக்கம்' எழுத முற்பட்டோம்.*

*கதை பற்றிய உங்கள் கருத்துகளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம்.*

*வித் லவ்,*

*சுபா*


மௌன
முழக்கம்